177278

Registered No. M. 1500. "NAVASAKTI"

# நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கஉ 1932ஆம் அக்டோபர்மீ பரல் உச

உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| அழகியநம்பியுலா ... ... ... | அக |
| சமரச சன்மார்க்க போதம் ... ... | கூ0 |
| கண்ணன் காட்சி ... ... ... | கூரு |
| சுந்தர சுலோசனை ... ... ... | கூகூ |
| நவசக்தி உதயம் ... ... ... | க0உ |
| நாட்டில் வழங்கும் பழங் கதைகள் ... ... | க0அ |
| மெய்யின்பத் துறைகள் ... ... ... | கக0 |
| இடியேறு ... ... ... | ககஉ |


வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

"நவசக்தி" ஆசிரியர்
திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

## இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,
பெண்ணுரிமை வேண்டுமா,
தீண்டாமை யொழிதல் வேண்டுமா,
சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,
இயற்கை யின்பம் வேண்டுமா,
வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

## வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை .... | 2 | 0 |
| தமிழ்த் தென்றல் .... .... .... | 2 | 0 |
| முருகன் அல்லது அழகு .... .... .... | 1 | 0 |
| இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் .... .... | 0 | 12 |
| மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் .... .... | 2 | 8 |
| என்கடன் பணிசெய்து கிடப்பதே .... .... | 0 | 8 |
| சைவத்தின் சமரசம் .... .... .... | 0 | 8 |
| சைவத்திறவு .... .... .... .... | 0 | 8 |
| கடவுள் காட்சியும் தாயுமானரும் .... .... | 0 | 4 |
| தமிழ் நூல்களில் பௌத்தம் .... .... | 0 | 4 |
| சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து .... .... | 0 | 8 |
| நாயன்மார் .... .... .... .... | 0 | 3 |
| சைவ சமய சாரம் .... .... .... | 0 | 1 |
| இமயமலை அல்லது தியானம் .... .... | 0 | 6 |
| தமிழ்நாடும் நம்மாழ்வாரும் .... .... .... | 0 | 4 |
| உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல் .... .... | 0 | 4 |
| முருகன் அருள் வேட்டல் .... .... .... | 0 | 4 |

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணி யார்டர் கமிஷன் கழித்து வி.பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அர் - அப்துல்ஹமீத்
செப்பனிடுபவர் பெயர்
பிப்ரவரி 1993
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
பிப்ரவரி 1993
செப்பனிட்டு முடித்த நாள்
பார்க்கும் மு. பா. எ. கையொப்பம்.
உதவியாளர் கையொப்பம்

சக்தி
'என்கடன் பணிசெய்து கிடப்பதே'
வய ஐப்பசிமீ பரல் உ௪

திருக்குறுங்குடி

# அழகியநம்பி யுலா

[திருக்குறுங்குடியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சுவாமி அழகிய நம்பி பேரில் பாடப்பெற்ற இவ்வுலாப் பிரபந்தம் இதுகாறும் அச்சிடப்பெறவில்லை. இதன் ஏட்டுப் பிரதியொன்றும் கையெழுத்துப் பிரதியொன்றும் எனது நண்பர் திரு. S. முத்தையா பிள்ளையவர்கள் அன்புடன் உதவினார்கள். இந்நூலைக்குறித்து மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தபொழுது, இதன் பிரதியொன்று சென்னை அரசாங்கத்தொன்னூல்-நிலையத்தில் உள்ளதாகத்தெரிந்து கொண்டேன். இவையே இந்நூலை அச்சிடுதற்குப் பயன்பட்ட பிரதிகளாம். இந்நூலின் ஆசிரியரது பெயர் முதலிய வரலாறு யாதொன்றும் அறியக்கூடவில்லை.—எஸ். வையாபுரிப் பிள்ளை.]

காப்பு

பூமாலை சேர்குறுங்கைப் பொன்மேனி நம்பியெங்கள்
மாமால் பவனியுலா மாலைக்கு—நாமேவு
பூவற் கருடனே பொன்னுலகத் தார்பரவுங்
காவற் கருடனே காப்பு.

நூல்

கார்கொண்ட மேனியான் கைகொண்ட நேமியான்
பார்கொண்ட பாதப் பாந்தாமன்—சீர்கொண்ட
பூமகளும் பார்மகளும் போற்றியிரு பாலிருப்ப
மாமலரோன் கைகுவித்து வந்திப்ப—நேமியுடன்
சங்கமுத லைம்படையுந் தானிலங்கப் புள்ளரசு
புங்கவனுஞ் சேனையர்கோன் போற்றிசைப்ப—எங்குநிறை
தேவர் குழாம்நெருங்கிச் சேவிப்பச் செங்கமலப்
பூவலரும் நீலவரை போலவே—பாவலருக்கு
5. மிஞ்சிய வைகுண்ட [1]வீட்டிருக்கும் நாளவுணன்
நெஞ்சிற் செருவம் நிறுத்தவெண்ணிக்—கொஞ்சவுரு
வாமனமாய் வேள்விபுரி மண்டபத்திற் சென்றிரந்து
தாமனதால் மூவடிமண் தாவென்ன—ஓமெனவே

(பி - ம்)— [1]வீட்டிருக்க.

பானுததி யிற்பகுவாய்ப் பாம்பிற் பசுத்தூரத்துங்
கோவிலா விற்றுயிலுங் கோவிந்தன்—மேலடியார்
தன்னெஞ்சும் வைகுந்தத் தானமுந் தாழ்ந்திறைஞ்சும்
என்னெஞ்சும் நீங்கா தினிதிருந்தோன்—முன்னமொரு
மாவானை முன்னு மதுரத் தமிழ்பாடு
நாவாணன் பின்னும் நடந்தபிரான்—தேவாண
ஈசனூர் பக்கத்தும் வத்துமறை யுச்சியினும்
நேசமா யெப்போதும் நின்றமால்—காசினியாந்
55. தான மடிதீண்டத் தாரகைக்கு மேலான
வானமுடி தீண்ட வளர்ந்தபிரான்—ஆன நவம்
நம்புருஷ நாரா யணப்பேரே ரிச்சிறப்புந்
தும்பியின் றுலாவியபூஞ் சோலையும்—பைம்புனல்சேர்
[1]காலடியி லாற்றின் கவர்த்தலையிற் பொன்விளையச்
சாலி விளையுந் தடம்பணையும்—மேலான
சித்திர கோபுரமுஞ் சேர்ந்ததென்னஞ் சோலைகளும்
வர்த்தனையாந் தென்குறுங்கை மாநகரான்—இத்தரையில்
முத்தொழிற்கு மூவுருவாய் மூலநடு வீறுகி
வித்தகஞ்செய் பேரின்ப வீட்டினன்— [2]அத்திபடி
60. மீனுமை பன்றியரி மிக்க குறள்பரசுக்
கோன்வார் சிலைராமன் கூன்கலப்பை—தானே
விசயபெல ராமன் விளங்கு கிட்ண மாவாந்
தெசவவதா ரம்புரியுந் தேவன்—உசிதமறைக்
காரணத்தா னூர்க்குமடங் காரணத்தா னேந்தியகை
வாரணத்தான் காத்தருள்கை வாரணத்தான்—கார்வரைபோல்
ஆகத்தான் பூமகள்சே ராகத்தா னன்றெடுத்த
நாகத்தான் பள்ளிகொண்ட நாகத்தான்—கோகனக
வுந்தியா னீள்சகட வுந்தியான் கன்றெறிந்த
வந்தியான் தாரணிசெவ் வந்தியான்—சிந்தியார்
65. உண்ணத்தான் பார்முழுது முண்ணத்தான் நீண்டகடல்
வண்ணத்தான் வாமகர வண்ணத்தான்—எண்ணுமன்பால்
வாரத்தான் முன்பாரா வாரத்தான் அஞ்சவெய்த
தீரத்தான் சிந்துநதி தீரத்தான்—பாரிரந்த
வாமத்தான் சங்கரன்சேர் வாமத்தான் ஆயிரமா
நாமத்தான் கஸ்தூரி நாமத்தான்—கோமளப்பால்
வேலையான் முத்தொழில்செய் வேலையா [3]னெல்லமைத்த
மாலையான் பூந்துளப மாலையான்—ஞாலத்
திடர்செய் கனக னெதிர வவன்றன்
குடரலங்க லாயணிந்த கொண்டல்— [4]கடல்சார்
70. அலகில் தரணி யடியி [5]லடைய
மலரு மிருதாள் மலரான்—குலவுநெறி
நின்று முனிவர் நெருங்கித் தவம்புரியு
மன்றல் மயேந்திர மால்வரையும்—நன்றுதருஞ்
சிந்து நதியுந் திருப்பாற் கடல்வளமும்
நந்துதவழ் வைகுந்த நன்னாடும்—முந்துங்

(பி - ம்)— [1]காலடியி லிாற்றினக். [2]அத்தியடி. [3]னெல் வளைத்த. [4]கடலரசர். [5]லடையு.



குறுங்கா புரியுங் குலவுபுது வாச
மருங்கா துளப மலரும்—நெருங்கும்
கருட துவசமுங் கைமதங்கள் சிந்த
மருடருநாற் கோட்டுமத மாவும்—தரணியிலே
75. வென்றி தருங்கவன மேவு துரகதமும்
மன்றலொலி மாறு மணிமுரசுந்—துன்று
மருவு தசாங்கமென வாழ்வோன் சிறந்த
உருவு தசாங்க முடையோன்—அருமறைதேர்
அய்யன் குழகன் அழகிய நம்பியலர்
கொய்யுந் துளபக் குறுங்குடிமால்—பையா
டராவணை வாசன் அறிவி லரிய
பிரானெனை யாளும் பெருமாள்—விராவுமலை
நம்பிதிருப் பாற்கடலில் நம்பிபள்ளி கொண்டருளும்
நம்பி யிருந்தநம்பி நானிலத்தில்—உம்பர்தொழ
80. நின்றகரு மேகம்போல் நீண்டபொன் மேனிநம்பி
வென்றிபுனை நாத விநோதநம்பி—என்றும்
தரணிபுக ழாபற் சகாயநம்பி செம்பொன்
மருவிய செங்கனிவாய் நம்பி—கருணை
பரவுதய மார்த்தாண்டப் பந்தற்கீ முண்மை
வருராம தேவமக ராசன்—தருபீடத்
துற்பனமாய்ப் பூமகளும் [1]ஓங்கு நிலமகளும்
விற்பனமாய் நீங்காத மேன்மையான்—அற்புதமாம்
நங்கை யெனையாளும் நம்பிக்கு நாச்சியார்
மங்கை குறுங்குடி வல்லியார்—பங்கிலே
85. சிராக வீற்றிருக்கச் சித்த மகிழ்ந்துதிரு
வாரா தனங்கொண் டருளுநாள்—பாரோர்
பரவு திருப்பங் குனித்திருவி ழாவிற்
கருட துவசமேற் கட்டிச்—சுருதிமுறை
கேட்டு முதற்றிருநாள் [2]கேடகத்தி ரண்டாம்நாள்
நீட்டு திறல்விசைய சிங்கத்துஞ்—சூட்டுநாள்
மூன்றி லனுமார் முதுபுயத்தும் நாலாம்நாள்
நான்றமுடி யைந்தலை நாகத்துந்—தோன்றிவரும்
அஞ்சாம்நா ளிற்கருட னம்புயத்தும் ஆறாம்நாள்
எஞ்சாத வானையினும் ஏழாம்நாள்—மிஞ்சவே
90. வேண்டியபள் ளிச்சிவியார் மேவு சிவிகையினுங்
கூண்டவெட்டாம் நாளிற் குதிரையினும்—பூண்டுங்
குலவொன்ப தாம்நாள் குருந்தேறி வீதி
வலம்வந்து பத்தாம்நாள் வானில்—அலருதைய
காலத்தில் நித்யல்படிக் கட்டளையாந் [3]தாரையுட்ணஞ்
சீலத் துடனமுது செய்தபின்பு—பாலாழிச்
சீரார் திருமஞ் சனஞ்செய்து வாய்த்ததிரு
வாரா தனங்கொண் டருளியே—நேராய்
இசைந்தமணி ரத்னாபி ஷேகத்துக் கேற்க
அசைந்த குழைக்கா தழகும்—பசுந்துளபத்

(பி - ம்)— [1]ஓங்க. [2]கேடகத்து மிரண்டாநாள். [3]தாரையுட்டிணஞ்.

95. தாருங் கவுஸ்த்துவமுஞ் சங்குசக்ரக் [1]கையுமியல்
தேருங்கஸ்த் தூரித் திருநுதலும்—காரில்மின்போற்
பீதாம் பரமும் பிறவிப் பிணியறுக்கும்
பாதாம் புயமும் பலபணியுஞ்—சோதிதரு
மாணிக்க மாலை வயிரவொளி யுஞ்சூழ்ந்த
[2]காணிற்பொன் பூத்ததொரு கார்வரைபோல்—பூணிலகப்
பூவுலகும் பாதலமும் பொன்னகரத் திந்த்ரன்முதல்
தேவர் முனிவர் செயசெயென—மேவரிய
காளமுதற் பல்லியமுங் கார்முழக்க மென்னவண்ட
கோளமட்டும் நின்று குமிறவே—ஆழ்வார்கள்
100. பன்னிருவ ரோதியப்ர பந்தமும் நான்மறையும்
முன்னம் மறையோர் மொழிந்துசெல்ல—உன்னரிய
பேருளா ளச்சீயர் பேராம் வயிணவர்கள்
சார்வுறுதா னத்தார் தலத்தார்கள்—வாரமுறுங்
கோயில் வளாவனைத்துக் கொத்தும் புடைசூழ
ஏயதிருத் தேரி லெழுந்தருளி—நாயகனார்
சீலப் பவனிவரச் சேனையர்கோ னின்றுதிரு
வோலக்கஞ் சேவித் துடன்போத—மேலான

குழாங்கள்

காத லரம்பையருங் காகோ தரநாட்டு
மாதரும்பர் மங்கையரும் வந்திண்டிச்—சீதக்
105. களமுங் கவானுங் கனதனமேற் றேய்பில்
வளமும் விழியும் வதனத்—தழகும்
கமுகு கதலி கரும்பிளநீர் வாசங்
குமுகுமெனுங் காவிகஞ்சங் கொண்டே—சமுகமாய்
வீதி வளமைசெய்யு மேன்மைபோ லேநெருங்கி
நீதி யிருமருங்கும் [3]நின்றேற்றி—மாதரீர்
வாரீர் பவனிதொழ வாரீ ரிவரழகைப்
பாரீர் எனவே பகருவார்— [4]தார்குழலீர்
முன்னனை காத்தார் முலையானைக் கன்புசெய்யார்
என்னு மிவர்நீதி யென்றுசொல்வார்—நன்னுதலீர்
110. நாடறிய வேமுன் நரசிங்க மாயானைக்
கோடுபிளந் தாரென்று கூறுவார்—ஆடைதனை
அன்றொருத்திக் கீந்த தவராகி மாதர்கலை
இன்றுகொள்வ தேதென் றியம்புவார்—நன்றுநன்று
கூடுகின்ற கோபியர்தங் கூறைகவர்ந் தேதுளபஞ்
சூடுகின்றார்க் குள்ள தொழிலிதென்பார்—ஆடல்மதன்
வாதை பொறுமல் வளைசோர்வார் வார்சோர்வார்
கோதைமலர் சோர்வார் குழாத்தொருத்தி—பேதையடர்

பேதை

காலம்வரு மட்டுங் கரைகடவா வேலைபோல்
வேலைவிடம் போலும் விழியினாள்—மாலை
115. வனைகுழலார் தம்முடனே வண்டலயர் போதில்
எனையடிமை கொண்டநம்பி ராயர்—புனைதேர்ப்

(பி - ம்)— [1]கையுமேல். [2]காணிப்பொன்; காணிற்பொன். [3]நின்றேத்தி? [4]கார்குழலீர்.



பவனிதொழுந் தாயரைப்பின் பற்றிநடந் தோடி
யவர்கள்சொன்ன வண்ணமுறைத் தன்னே—இவர்மெய்யில்
மாலை தனைவாங்கும் வண்டல்மக வுக்கெனவே
சேலைநிகர் கட்கடைநீர் சிந்தினாள்—ஆலை
மதன்பைங் கழைகுழையான் வார்கணையும் பூட்டான்
விதஞ்செய்மறு வீதிபோம் வேளை—பெதும்பைதன்

பெதும்பை

வார்புனையு முத்து வடம்புனையச் சிந்தையருள்
[1]கூரடிக் கொண்டரும்புங் கொங்கையாள்—ஆர்வமுடன்
120. வெற்றிசெய்யுங் [2]காமா விகாரங் கொழுந்துவிட்டுப்
பற்றிப் படரும் பருவத்தாள்—பொற்றொடியார்
கூடுங் கலவி குறித்தெழுதுஞ் சித்திரத்தை
மேடையிற்போய்ப் பார்த்துநிற்கும் வேளைதனில்—சூடும்
மருத்தேர் குழற்பாங்கி வந்துநம்பி ராயன்
திருத்தேர்ப் பவனியென்று செப்பக்—கருத்துருகி
மாதருடன் வந்து வணங்கிநம்பி ராயன்மேல்
காத லரும்பவிழுங் காட்சிபோல்— [3]ஓதீர்
மருக்குலவு மார்பிலொரு மாதல்லால் தோள்மேல்
இருக்குமிவ ளாரொருத்தி யென்றாள்—விரைக்குழலார்
125. பூவில்வளர் மாது புவிமா திருவரிவற்
காவசிய மென்ப [4]தறியாயோ—பாவாய்
எனவுரைத்த போதில் இணைவிழியால் நோக்கி
மனமுருகி முன்பின் மறந்தாள்—பனிமதியைக்
காண விளகுசந்த்ர காந்தமொத்தாள் மாரன்வர்மம்
பூணவயல் வீதிப் புறம்போந்தாள்—வாணுதலாள்

மங்கை

மங்கை யொருத்தி மதனுபி ஷேகமிரு
கொங்கைமயில் காமன் குலதெய்வம்—இங்கிதமாஞ்
சீரார் துணைவிநம்பி தேர்ப்பவனி பார்க்கமின்னே
வாரா யெனவே மகிழ்ந்துபோய்—நேராய்ப்
130. பணிந்தே மயலாய்ப் பரிபவங்க ளெல்லாந்
துணிந்தே யெதிராடிச் சொன்னாள்—மணந்தருளிச்
செய்யவிருந் தாவனத்திற் சென்றொருத்திக் காகநீர்
மையல்கொண்ட செய்தி மறந்தீரோ—பொய்யலவே
மோகம் பொறுமலொரு மொய்குழலுக் கும்மைப்போல்
ஆகங் கொடுத்தார்கள் ஆர்சொல்வீர்—சோகமாய்ப்
பேராசை [5]யானுனும் பெண்ணென்றே பூந்துளபத்
தாராசை தீரவே தாருமென்று—தேரிற்
றொடர்ந்தாள்வே ளம்பு சொரியவயல் வீதி
கடந்தார்பொற் றேருடனே நம்பி—மடந்தை

மடந்தை

135. வடுவும் பிணையும் வளர்சேலும் வேலும்
கடுவுமமு துங்கலந்த கண்ணாள்—நடுவாம்

(பி - ம்)— [1]கூர்வடிக். [2]காமம்? [3]ஆதீர். [4]தறியாயே. [5]யாய் நானும்.

எழுபருவத் துள்ளு மிவள்பருவ மென்று
தொழுதுமதன் போற்றுந் துரைப்பெண்—அழகான
பொன்னூச லாடும் பொழுது குழையிரண்டும்
மின்னூச லாட விறலிபோய்—உன்னழகு
நன்றென்று கொண்டாடி நம்பிதிருத் தேர்ப்பவனி
யின்றென்றாள் சென்று ளிறைஞ்சினாள்—நின்றுருகிச்
செங்கனகத் தேர்விருப்பஞ் செய்தீர் மயலான
வெங்களல்குற் றேருழுமக் கேலாதோ—பைங்கமலக்
கைச்சங்கங் கொண்டீர் கருத்தில் விரும்புமெங்கள்
மெய்ச்சங்கம் நீர்விரும்ப வேண்டாவோ—நச்சரவம்
எறுபுள்ளோ டின்புற் றிருந்தனுபோ லெங்கள்மேற்
சீறுமதி நட்பாச்சோ தீண்டாதோ—கூறீர்
எனுமுன்மத னெய்தான் இருகாலி [1]விட்டாள்
மனைவயல்கு லேந்தினாள் வாரைத்—தனமேற்
கரிய குழல்மறைப்பக் காதல்கொண்டாள் மற்றோர்
தெருவில் மதநெடுந்தேர் செல்ல—அரிவை

அரிவை

இலவுகுமிழ் முல்லை யிதழ்க்குவளை வள்ளை
மலருமொரு தாமரையில் வாய்ப்பக்—கலவியிலே
மேனகையுங் கொல்லிமலை மேனகைசெய் தாளும்வெட்கத்
தானகைசெய் [2]காமசுர தானியாம்—மானனையாள்
பாங்கினாற் செம்பொற் [3]படாமும் வளைகோலும்
வாங்கினாள் நம்பி வடிவெழுத—ஓங்குபொற்றேர்
மன்னுங் குறுங்கைநம்பி வந்தார்வந் தாரென்று
சின்னத் தொனிகேட்பச் சென்றிறைஞ்சி—முன்னொருத்தி
[4]மெய்க்கரும்பி னாசையால் வில்லொடித்தீர் போர்மாரன்
கைக்கரும்பை வில்லைசெய்யக் காணேனான்—மைக்கடலின்
வீறடைத்து மேவுமணை மீதுசென்றீர் என்னிருகண்
ணாறடைத்து மேவு மணைகாணீர்—மாறுபடும்
புள்வாய் கிழித்தநீர் பூங்குயிலோ டன்றிலெனும்
புள்வாய் கிழிக்கவின்று போகாதோ—உள்ளம்
பரிபவமென் றாள்கடைக்கண் பாலித்து மற்றோர்
தெருவில் மதநெடுந்தேர் செல்லத்—தெரிவை

தெரிவை

நிலைமுடித் தோன்முடிக்க நீறுபட்ட காமன்
இலகுமுயிர் பெற்றலக மெங்குஞ்—சிலையேந்திச்
சென்றுபோர் வென்று செயல்தம்பம் நாட்டியே
நின்றநாள் தேடுகின்ற நிட்சேபந்—துன்றுமலர்
வாவிப் புனலாடி மாதருடன் தேர்ப்பவனி
சேவித்தாள் நம்பி திருமுன்போய்—மேவீர்
வளையாழி கைக்கிருக்க மையலா மெங்கள்
வளையாழி கொள்ள வழக்கோ—இளையார்கள்

(பி - ம்)— [1]விட்டான். [2]காம சுரதனியாம். [3]பாமும் வளைகோலும். [4]மெய்க்கரும்பு மாசையால்.



காணவளைத் தாளிவளைக் கைக்கொளவே நல்கீரேல்
பூணமலர்த் தாரளித்தாற் போதுமே—வாணுதலார்
ஆந்தரங்க மாமிருவர்க் காட்சிபுய மார்பல்லாற்
பூந்துளப மார்க்கும் பொதுவன்றோ—பூந்துளபத்
[1]தாரே தரீரேற் றகுந்தகா தென்பதொன்றும்
பாரேன்கை [2]தொட்டும் பறிப்பேனான்—சேருமென்றாள்
புன்முறுவல் செய்துநம்பி [3]போனா ரயல்வீதி
மன்மதனும் நின்று வளைக்கின்றான்—கன்னற்
றனுவிற் சரந்தொடுத்தான் [4]தையலின்மெய் யென்னத்
தனுவிற் [5]சரக்கூட தானாள்—வனிதையப்பாற்

பேரிளம்பெண்

காரார் கருங்கூந்தற் செங்கனிவாய் வெண்முறுவற்
பேரான சிற்றிடைசேர் பேரிளம்பெண்—மாரனுக்கு
வீறுதரு விற்றொழிலு மிக்ககலைக் கியானமுமே
[6]கூறவருந் திட்சா குருபீடம்—தேறிமறை
தேடுகின்ற நம்பி திருப்பதிநாற் றெட்டிலொன்று
பாடகமென் றேயணியாப் பாதத்தாள்—நாடறிய
எங்கள்நம்பிக் கொப்பாக யான்வளையே னென்றிகழ்ந்து
சங்கவளை பூட்டாத் தடக்கையாள்—அங்கொருத்தி
மாலுக்கு மாலானாள் மாற்றவள்பே ரென்றுசொல்லிக்
கோலத் திருவணியாக் கூந்தலாள்—மேலுலகத்
தோகையைவென் று நானே உபயசொர்க்க மாய்ச்சினந்து
பாரைவெல்லப் பார்க்கும் பயோதரத்தாள்—நேரான
சீதம்வளர் வச்ரச் சிலைதனைத் தேயுகவற்
கிதைபிர சங்கிக்கச் சேட்டிருக்கும்—போது
விரும்பவனி போற்றுநம்பி மேவுதிருத் தேரில்
வரும்பவனி சேவிக்க வந்தாள்—கரும்புயல்போல்
நீண்டபொன் மேனிநம்பி நின்ற வடிவழகைக்
காண்டலுமே மட்டமிஞ்சுங் காதலாய்—வேண்டுகின்றாள்
சந்தகமும் [7]நீர்விரும்புஞ் சந்திரபா கைக்குதவும்
ஐந்தருவந் தானு மதுகொள்ளேன்—சிந்தா
மணிமகத்வ மார்புமது மார்புக் கணியாய்
அணிகவுத்வ மீதுமில்லை யாசை—பணிவோர்க்குச்
[8]சாந்தணியு மார்பிற் சவாது மணம்வீசும்
பூந்துளப மாலைதந்தாற் போதுமே—ஈந்தருள்வீர்
என்று ளிதுசமய மென்றுமதன் வில்வளைந்தான்
வென்று னினியெனவே மெய்தளர்ந்தாள்—தென்றல்வரச்
சாலைகங்கள் தாழ்திறந்தார் தாரையுடன் சாந்திகன்மென்
மேலுமமைத் தார்தனிரால் மெத்தையிட்டார்—ஆலவட்டம்
வீசினார் மல்லிகைவி தானித்தார் சாந்துபன்னீர்
பூசினார் நேர்ந்தாரப் போதொருத்தி—நேசமுள்ள
மூதறிவாம் பாங்கிவந்து மொய்குழலா ளைவிலக்கிக்
காத லொருவர் கருத்தறியீர்—வேதனையே

(பி - ம்)— [1]தாரேதீ ரீரேற். [2]தொட்டுப். [3]போனார் பல வீதி. [4]தையலும் மெய். [5]சரக்கூடத். [6]கூறுவரு. [7]நீயிருப்பச். [8]சாந்தணிவர் மீது.

செய்தீர் இவட்கிதங்கள் செய்வதுபோ லேயிடர்கள்
செய்தீர் இனியென்ன செய்குவீர்—வெய்துயிர்க்க
வார்த்தபன்னீர் நம்பி மகிழுந் திருப்படிக்கத்
தீர்த்தமிக ராகுமோ செப்புவீர்—போர்த்த
குளிரு முலைமேற் குறுங்கேச நம்பி
துளபநிக ராகுமோ சொல்லீர்—குளிர்மையென் றீர்
180. ஏந்து களபநம்பி யிட்டபட்ட வர்த்தனம்போல்
போந்தமயல் போக்கவிது புத்தியோ—சாந்தாற்றி
வட்ட விசிறிநம்பி வாழ்கோ புரவாச
விட்டமுள்ள தென்றலொப்போ வீதெல்லாம்—விட்டுவிமர்
என்றுபோய் நம்பிக் கிதமுரைத்து வாங்கிவந்து
மன்றல்மலர் சூட்ட மனமகிழ்ந்தாள்—நின்றுகிளி
பேசுகின்ற தென்னவரும் பேதைமுதற் பேரிளம்பெண்
ணைசகொண்டு போற்ற வருள்செய்தே—தேசமகிழ்
184. நம்பிகுறுங் காபுரியில் காத விநோதநம்பி
யும்பர்தொழப் போந்தான் உலா.

## சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

33. இயற்கையை மட்டுங் கொள்வோர் சிலரிருக்கிறார். இயற்கை புலனாகும் ஒன்றுதலானும், இறை புலனாகா ஒன்றுதலானும் இயற்கையை மட்டுங் கொள்ளுதல் வேண்டுமென்பது அவர் தங் கொள்கை. அக்கொள்கையுடையாரை இறை நேயர்களிற் சிலர் நாத்திகரெனக் கூறுவது வழக்கம். இதனையொட்டி வாதங்கள் எழுகின்றன. வாதமின்றி இருசாராரும் வாழ்வு நடாத்தலாம். இருசாராரும் மனவுணர்வுடையவராதலின், இருவர்க்கும் இறை புலனாவதில்லை. இருசாராரும் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவதில் ஒருமைப்பாடுடையவர். பிணக்கு எற்றுக்கு? இயற்கை உடல்; இறை உயிர். உடல் வழி நிற்பது, உயிர் வழி நிற்பதாகும். இயற்கையை மட்டுங் கொள்வோர் இறையை மறுத்தோ பழித்தோ கூறுமலும், இவரை மற்றவர் நாத்திகரென இகழாமலும் இருசாராரும் இயற்கை வழி நின்று கடனாற்றல் அறிவுடைமை. இயற்கை நெறியே இறை நெறி.

34. இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவோர் ஆத்திகர். அவ்வாழ்வு நடாத்தாது வேறு வழியில் செல்வோர் நாத்திகர்.

### III மார்க்கம்

1. சத்துக்குரிய மார்க்கம் இயற்கை.

2. இயற்கையோடு இயைந்து வாழ்வது சன்மார்க்கம்.

3. இயற்கையோ டியைந்து வாழ்வது என்பதும், இறையோடியைந்து வாழ்வது என்பதும் ஒன்றே.

4. இறை, புலனாகாது இயற்கையுடன் எங்கும் என்றும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஒன்றுதலான், மனவுணர்வினர் இயற்கையை விடுத்து இறையைத் தனியே நாடுதல், நீர் வேட்கையைத் தணித்துக்கொள்ளக் கானற் சலத்தை நாடி ஓடினவன் கதையாக முடியும்.



5. இயற்கையும் இறையும் பிரிவின்றி இருத்தலானும், இறையை விடுத்து இயற்கை நிற்றலின்மையானும், இயற்கை என்விடத்து அஃது இறையையுங் குறிப்பதெனக் கொள்க.

6. இயற்கையும் இறையும் ஒன்றுபட்டிருத்தலால், இறையை, இயற்கை இறை என்றுங் கூறலாம்.

7. மன வுணர் வுடையோர், மார்க்கமாகிய இயற்கையைப்பற்றுக்கோடாகக்கொண்டு வாழ்வது சிறப்பு.

8. மக்கள், இயற்கையில் மனம் படியத் தக்க துறைகளில் இறங்கப் பயில்வது நல்வாழ்வுக்கு அடி கோலுவதாகும்.

(துறவு நுட்பம்)

9. இயற்கையை வெறுத்தல்கூடாது. இயற்கையை வெறுப்பது இறையை வெறுப்பதாகும். ஆகவே இயற்கையை வெறுப்பது நாத்திகமென்க.

10. இயற்கை வாழ்வை வெறுப்பது துறவு என்று சில விடங்களில் கருதப்படுகிறது. அது தவறு.

11. துறவு என்பது என்னை? இயற்கைக் குணத்துக்கு மாறுபட்ட செயற்கைக் குணத்தை நீப்பது துறவாகும்.

12. தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் கருதுவது உயிரின் இயற்கைக் குணம். அவ்விழுமிய குணம் விளங்காதவாறு அதனை மறைப்பது செயற்கைக் குணம்.

13. செயற்கைக் குணத்தின் வரலாற்றை ஆராய்வதில் பொழுதுபோக்க வேண்டுவதில்லை. செயற்கைக் குணமிருத்தலை நாம் உணர்கிறோம். அதனை அகற்ற முயல்வது அறிவுடைமை.

14. பொறை, அன்பு, அருள், வண்மை, தனக்கென வாழாமை, பிறர்க்கென வாழ்தல், அவ்வாழ்வுக்குரிய தொண்டு செய்தல், இன்ன பிற இயற்கைக் குணத்தின் கூறுகளாம்.

15. பொறாமை, எரி, பகை, வன்கண்மை, தனக்கென வாழ்தல், பிறர்க்கென வாழாமை, பிறர் நலங் கருதித் தொண்டு செய்யாமை, இன்ன பிற செயற்கைக் குணத்தின் கூறுகளாம்.

16. துறவு, செயற்கைக் குணத்தை நீப்பது.

17. செயற்கைக் குணத்தை நீத்து, இயற்கைக் குணத்தில் நிலைத்திருப்பின் இன்ப வாழ்வு கூடும்.

18. செயற்கைக் குணத்தை எப்படி நீப்பது? இயற்கையை வெறாது, அதனுடன் இயைந்து வாழவாழச் செயற்கைக் குணம் தானே ஒழியும். இயற்கை வாழ்வை வெறுப்பது செயற்கைக் குணத்தை நீப்பதாகாது.

19. உடலையும், மண்ணையும், பொன்னையும், பெண் ஆணையும், ஆண் பெண்ணையும் நீப்பது இயற்கை வாழ்வாகாது. இயற்கை வாழ்வுக்குரிய உடல் முதலியவற்றை நீத்தல் துறவெனக் கருதுவது பாவம்.

(உடலோம்பல்)

20. முதலாவது உடலை நன் முறையில் ஓம்புதல் வேண்டும்.

21. உடல், உயிர் விளக்கத்துக்கென இயற்கை இறையால் வழங்கப்பட்ட உடைமை. உடல் இயற்கையின் காரியம். அஃது இறையின் கோயில்.

22. இயற்கைக் காரியம், ஒவ்வொருவித உடலாக அமைந்து அமைந்து, உயிரைப் படிப்படியாக விளக்கி விளக்கி, அறியாமையினின்றும் விடுதலை செய்து வருகிறது. அத்தகைய உடலை ஓம்ப வேண்டுவது நம் பெருங் கடமை.

23. உடலை மாயையெனக் கருதி அதனை வெறுத்தலும், ஒறுத்தலும், தீயொழுக்கத்துக்குப் பாழ்படுத்தலும், அகால மரணத்துக்கு உட்படுத்தலும் பாவம்; பாவம்; பெரும்பாவம்.

24. உயிரின் கட்டை அறுப்பதற்கு உடல் ஒருகருவி. அக்கருவியைப் பழுதுபடுத்தல் உயிரின் நலத்துக்குக் கேடு சூழ்வதாகும்.

25. உடலோம்புவது இயற்கை வாழ்வுத் துறைகளுள் ஒன்று.

26. உடலோம்பலுக் குரிய துறைகளில் இன்றியமையாத சில வருமாறு:- வைகறைத் துயிலெழல், காலைக்கடன்களை முடித்தல், கதிரொளியில் மூழ்கல், காற்றில் உலாவல், நீராடல், இயற்கை இறையை நினைத்தல், பொருந்திய உணவு கொள்ளல், குறித்த வேளையில் கடனாற்றல், எரி பகை முதலியவற்றை எழுப்பும் துறைகளிலும் தொழில் முறைகளிலும் ஈடுபடாதிருத்தல், இயற்கைப் பொருள்களை விருப்பொடு நோக்கி நோக்கி உன்னி உன்னி மகிழ்தல், பெண்ணுடன் ஆணும் ஆணுடன் பெண்ணும் கலந்து வாழ்தல், ஒழுக்கங் காத்தல், காவிய ஓவியங்களிற் கருத்திருத்தல், பிறவுயிர்கட்கிரங்கல், தீங்கு செய்வோர்க்கும் நலஞ் செய்தல், இன்னோரன்ன பிற.

27. நமது உடலைப் போலவே பிற உயிர்களின் உடலையும் பாவித்தல்வேண்டும். பிற உயிர்களின் உடம்புகளுக்குத் தீங்கு செய்வது நம்முடம்புக்கு நாமே தீங்கு செய்வதாகும்.

28. இயற்கையில் ஒரு சக்தி இருக்கிறது. அதன் இயல்பு உயிர்களின் வளர்ச்சியை நாடுவது. அவ்வளர்ச்சிக்கென இயற்கையில் உடலங்கள் அமைகின்றன. அவ்வுடலங்களுக்குக் கேடு செய்வது இயற்கை வளர்ச்சியைத் தடுப்பதாகும். அத்தடை கேடு செய்தோர்மீதும் தாக்கி இடர் செய்யும். ஆகவே எவ்வுயிருடலுக்குந் தீங்கு செய்தலாகாது.

(கல்வி)

29. நல்வழியில் உடலை ஓம்பிக்கொண்டு உயிரை ஓம்புதற்குக் கல்வி பயிலல்வேண்டும்.

30. கல்வி என்பது அறியாமையைக் கல்வி அறிவை விளக்குவது - அதாவது இருளையோட்டி ஒளியை வழங்குவது. இருள், செயற்கையின் கூறு; ஒளி, இயற்கையின் கூறு.

31. ஏட்டுக் கல்வியுடன் இயற்கைக் கல்வியையுந் தொடர்ந்து பயிலுதல் வேண்டும்.

32. ஏட்டுக் கல்வி என்பது இயற்கையின்படம்.

33. இயற்கையோடியைந்து நின்று வாழ்வு நடாத்திய அறிஞர்கள், அவ்வாழ்வில் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பின் வருவோர் பொருட்டுப் பல திறக் கலைகளாக எழுதிச் சென்றார்கள். அக்கலைகளின் பொருள் இயற்கை.

34. ஏட்டுக் கலைகள், இயற்கைக் கழகத்தில் எப்படிப் பயில்வது என்பதை உணர்த்துவன.

35. கலைகள் பலதிறத்தன. அவைகளை இருகூறுபடுத்தலாம். ஒன்று இயற்கை இயல்களைக் கூறும் இனம்; இவ்வினம் அறிவியற்கலை (Science) எனப்படும். மற்றொன்று இயற்கைக் காட்சி இனம். இவ்வினம் காவிய ஓவியக் கலை எனப்படும்.

36. காவியமும் ஓவியமும் இயற்கை அன்னையின் திருக் கோயில்கள். அக்கோயில்களில் நுழைந்து பார்த்தால் இயற்கை அன்னையின் உறுப்புக்களும், கோலங்களும், ஆடல்களும், இயற்கை வாழ்வுத் திறங்களும், இன்ன பிறவும் விளங்கும்.

37. காவியங்கள் எழுத்தால் ஆக்கப்பட்ட சொல்லடுக்குக் கூடங்களல்ல. ஓவியங்கள் வரிக்கீற்றோ வடித்தலோ கொண்ட பிண்டங்களல்ல. அவைகளைப் பயின்று பயின்று, அவைகளின் நுட்பங்களைக் கூர்த்து உன்னி உன்னி, அவைகளில் ஒன்றி ஒன்றி, ஈடுபடப்பட, அவைகள் இயற்கைப் படக்காட்சிக் கூடங்கள் என்பது நனி விளங்கும்.

38. காவியமும் ஓவியமும் உயிர்களைச் செயற்கையினின்றும் இயற்கையிற் சேர்க்கும் பாலங்களென்க.

39. காவிய ஓவியக் கலைக் கழகப் பயிற்சி நாளடைவில் இயற்கைக் கலைக் கழகப் பயிற்சியாக மாறும். அம்மாற்றம் பெறுதற்கு இயற்கையில் 'அறம்' என்பது அமைந்திருக்கிறது.

(அறம்)

40. அறத்தை இல்லறம் என்றும் துறவறம் என்றுங் கூறலாம்.



41. அறம் இருகூறுடையது என்றும், ஒன்று இல்லறமென்றும், மற்றொன்று துறவறமென்றும், முன்னையது பெண்ணுடன் வாழ்வதென்றும், பின்னையது பெண்ணை நீத்து வாழ்வதென்றும், அஃது இழிந்ததென்றும், இஃது உயர்ந்ததென்றுஞ் சிலர் கூறுகிறார். அக்கூற்று, பொருளற்றது.

42. அழுக்காறு அவா வெகுளி முதலிய தீக்குணங்களை அறுப்பது அறம்.

43. அழுக்காறு முதலிய தீக்குணங்கட்கு அடிப்படையாயிருப்பது தன்னலம்.

44. தன்னலம் அறுந்தால அறம் விளங்கும். தன்னலத்தை அறுப்பது எப்படி?

45. ஒருத்தியோ ஒருவனோ தொடக்கத்தில் தன்னலமுடையவர்களாக இருத்தல் வெள்ளிடைமலை. அவளும் அவனும் உற்ற வயது அடையும்போது அவர்கள்பால் காதல் எழுகிறது. அக்காதல் இருவரையும் ஒன்றுபடுத்துகிறது. பின்னை அவரவரிடம் தனித்தனியே தன்னலமாகக் கட்டுப்பட்டுக் கிடந்த அன்பு இருவரிடமும் பாவுகிறது. இருவர்க்கும் பிள்ளைகள் பிறந்த பின்னை இருவரிடம் பரவிய அன்பானது மூன்றாவது உயிர்களிடம் பரவிப் பெருகுகிறது. பிள்ளைகளின் நலத்துக்குத் தாய் தந்தையர்கள் தன்னல மற்றுத் தொண்டு செய்தலை விரித்துக் கூற வேண்டுவதில்லை. இளமையில் இருவரும் பெற்ற கலைஞானமும், பின்னை வாழ்க்கையில் பெற்ற அநுபவமும் "நம் உயிர்கட்கும் நம்மைச் சார்ந்த உயிர்கட்கும், மற்ற உயிர்கட்கும் என்ன வேற்றுமையிருக்கிறது" என்று கருதச்செய்து, மற்ற உயிர்கட்குந் தொண்டு செய்ய உந்துகின்றன. இப்பொழுது அன்பு பிறவுயிர்கள் மாட்டுஞ் செல்வதாகிறது. அன்பு செல்லுமிடங்களில் அழுக்காறு அவா வெகுளி முதலிய தீக்குணங்கள் இடம் பெறுவதில்லை. ஆகவே தன்னல அழிவு பெண் ஆண் கூட்டுறவில் அதாவது இல்லறத்தில் உறுதல் கருதற்பாலது.

46. தீக்குணங்களை நீப்பது துறவு என்று மேலே விளக்கப்பட்டது. இந்நீத்தலை அறமென்றோ இல்லறமென்றோ துறவறமென்றோ கூறலாம்.

47. பெண் ஆண் கூட்டுறவு அன்பு வளர்ச்சிக்கென ஏற்பட்ட இயற்கை அறம்.

48. இயற்கை அறம் அல்லது இல்லறம் என்பது, இளமையில் பெற்ற கலைஞான இயல்களை வாழ்வில் செயலில் கண்டு தெளிந்து மெய்ஞ்ஞான அநுபூதி பெறச்செய்வது.

49. ஒருத்தியும் ஒருவனும் உற்ற வயது அடையும் போது அவர்பால் காதல் இயல்பாக எழுகிறது. அவ்வெழுச்சி இயற்கையினின்றும் பிறந்ததலால், அதற்குரிய பெண் ஆண் கூட்டுறவு இயற்கையின்பாற் பட்டதென்று தெளிக.

50. இயற்கை அன்னையும் இறை அப்பனுங் கூடுதலால் உலகம் முகிழ்க்கிறது.

51. உலகம் பெண் ஆண் மயமாக இருத்தல் கண்கூடு.

52. தாவரம் முதல் மக்கள் ஈறாக உள்ள உயிர்கள் யாவும் பெண்ணாகவேயில்லை, அல்லது ஆணாகவேயில்லை; உயிர்கள் பெண்ணும் ஆணுமாகவே அமைந்திருக்கின்றன.

53. பெண்ணும் ஆணும் இயற்கை அமைப்பிலிருத்தலால், பெண் ஆணைத் துறத்தலும், ஆண்பெண்ணைத் துறத்தலும் இயற்கை அறமாகா.

54. பெண் ஆணைத் துறத்தலும் ஆண் பெண்ணைத் துறத்தலும் இயற்கை அறமாயின், இயற்கையில் பெண் ஆண் என்னும் வேற்றுமை தோன்றாதவாறு படைப்பு நிகழும். ஆனால் பெண் ஆண் என்னும்வேற்றுமை தோன்றவே படைப்பு நிகழ்ந்துவருகிறது. இயற்கையில் பெண்ஆண் தோற்றமிருத்தலால், உலகிலும் பெண் ஆண் கலந்த அன்பு வாழ்வு நடைபெறுதல் வேண்டுமென்பது அறியத் தக்கது.

55. பெண்ணை நீத்தல் துறவுஎன்று எவரோ சிலர் கூறிப்போந்தனர். இயற்

இன்னோரன்ன நுட்பங்களை அறிவுறுத்தும் பச்சை மரத்தடியில் பசுக்களும் பெண்மக்களுஞ் சூழக் குழலூதுங் கண்ணன் காட்சியைக் காணுங்கள்; கருதுங்கள்; அக்காட்சியில் ஒன்றுங்கள். அக்காட்சியைக் காணக்காணப் புலன்கள் கண்களாகும்; கருதக் கருதக் கரணங்கள் சிந்தையாகும்; அக்காட்சியில் ஒன்ற ஒன்றக் குணங்கள் சாத்துவிகமாகும். முடிவில் பெண்மை என்னும் அமைதி நிலை கூடும். எல்லா உயிரும் பெண்மை என்னும் அமைதி நிலை பெற்றே இயற்கை இறைவனை அடைதல்வேண்டும்.

இயற்கையில் இசை மயமாயுள்ள இறையாகிய கண்ணனுக்குரிய தீபாவலித் திருநாள் வரப்போகிறது. அத்திருநாளில் கண்ணன் இயற்கைக் கோயில்களாகிய உயிர்களைச் சிறப்பாகப் போற்றல் வேண்டும். போற்றுதற்குப் பதிலாக வேறொன்று செய்தல் பாவம்; பெரும் பாவம். தன்னுயிரைப் போல் மன்னுயிரைப் பார்ப்பதே கண்ணன் குழலிசை கேட்பதாகும்.

கண்ணன் குழலிசை கேளுங்கள்
கவலை துன்பம் மீளுங்கள்

—"ஆனந்த விகடன்"

# சுந்தர சுலோசனா

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(உரிமை ஆக்கியோருடையது)

(தொடர்ச்சி)

"ஒரு மாதங் கழிந்தது. பெற்றோரை இழந்த வருத்தம் ஒருபால் வாட்ட, கணவனைத் துறந்த துன்பம் மறுபுறம் வருத்த, வாழ்க்கை இடிப்புண்ட வாட்டம் எப்புறமும் உறுத்தக் காந்தா நோய் வாய்ப்பட்டாள். கொடிய ஜுரம் அவளைப் பற்றியது. மூன்று திங்களாயின. பிப்ரவரிமாதம் 15-வது நாள் மாலை மூன்று மணியிருக்கும். டாக்டர் 'அவள் பிழைக்கமாட்டாள்' என்று கூறிவிட்டார். யான் காந்தாவின் அருகில் அமர்ந்திருந்தேன். அது காறும் ஸ்மரணையற்றிருந்த காந்தா தன்னுடைய கண்களைத் திறந்து அருகிலிருந்த என்னைக் கண்டாள். கண்டதும் அவளுடையமுகம் மலர்ந்தது. "அண்ணா!" என்று மெதுவாக அழைத்தாள். "என்ன காந்தா!" என்று யான் பதிலிறுத்தேன். "என்னுடைய இறுதி நெருங்கிவிட்டது. இனி யான் நெடுநேரம் அடிமை மணம் வீசும் பெண்ணுலகில் வதிந்து வதங்கேன். இறைவனுடைய அருளால் இப்பாழுலகை யான் நீத்துச் செல்லும் நேரம் அணுகிவிட்டது. இதுகாறும் யான் இறைவன் முன்னர், என்னறிவு முதிர்ந்ததிலிருந்து ஒரு பாவமும் செய்தேனில்லை. என்னுடைய கணவனுக்கும் காதலனுக்கும் உண்மையாகவே இருந்தேன். இறுதி நேரத்தில் அண்ணா! உமக்கருகில் உம்முடைய ஆண்மனையிலிருக்கும் பாக்கியமும் பெற்றேன். இனி எனக்கென்ன குறை. காதல! இப்பிறவியிலில்லாவிடினும் வரும் பிறவியிலேனும் நாம் நம்முடைய வாழ்க்கையில் உண்மையான பேரின்பத்தை நுகர்வது திண்ணம். என்னால் பேச இயலவில்லை....இறைவனின் அடியார் என்னை அழைக்கின்றனர். அண்ணா! உமக்காகவே யான் வருந்துகின்றேன். இறைவன் உமக்கருள் புரிக. காலம் நெருங்கிவிட்டது. காதல! என்னுடைய கண்மணிகளை உன்னுடைய புதல்வரைப்போலக் காப்பாயாக" என்று கூறினாள். அடுத்த நிமிடம் அவள் இறந்துபட்டாள். என் உயிரினும் உயர்ந்த காந்தாவை யான் இழந்தேன்....ஜயகுமாரரே! என் இன்னுயிர்க்காந்தா என்னைவிட்டுப் பிரிந்தாள்.

"எனக் கென்ன செய்வதென்று தோன்றவில்லை. மதிமயங்கி நின்றேன்.



என்னுடைய அன்னை என்னைத் தேற்றினார்கள். ஜயகுமாரரே! காலநாமதம் ஆவது யானறிவேன். பின்னர்க் கூற வேண்டுவனவற்றைச் சுருக்கமாகவே கூறுகின்றேன். காந்தா இறந்து ஓர் ஆண்டாயது. அதுகாலை சண்முக சுந்தரத்திற்கு நான்குவயதாம், மோகன சுந்தரத்திற்கு இரண்டு ஆண்டுகளும் நிறைந்தன. தாய் தந்தையரை நன்குணரா அவ்விரு செல்வர்களும் என்னையே அவர்களுடைய தந்தையாகவும், என்னுடைய அன்னையையே அவர்களுடைய அன்னையாகவுங் கருதினர். காந்தாவின் மீதெனக் கிருந்த காதல் இச்சிறுவர்கள் மீது சென்றது. மோகன சுந்தரம் ஏறக்குறைய காந்தாவின் ஜாடையையே உடையவனாகவிருந்தான். அவன் ஒரு நிமிடமும் என்னைவிட்டுப் பிரியான். அல்லும் பகலும் யான் அவனைச் சுமந்து திரிவேன். இவ்வாறு யான் ஓராண்டைக் கழித்தேன். என்னுடைய துன்பம் ஒருவாறு மறைந்திருந்ததென்றுங் கூறலாம்.

ஒரு நாள் என்னுடைய அன்னை என்னையழைத்து "என்னரு மைந்த! உனக்கிதுகாலை உன்னுடைய நன்மையைக் கருதியே யான் ஒன்று இயம்ப விரும்புகின்றேன். இதுகாறும் நீ என் மனதிற் கிசைந்த மைந்தனாய் இருந்தாய். உன்னுடைய தந்தை இறந்ததிலிருந்து யான் உன்னுடைய நன்மையை நாடி நிற்கின்றேன். ஆனால் எனக்கும் வயதாகிவிட்டது. இனிப் பல்லாண்டுகள் யான் உயிருடன் இருப்பேன் என்றெண்ணுதற் கிடமில்லை. மேலும் காந்தாவின் குழந்தைகளையும் வளர்த்தல் நம்முடைய கடனாக இருக்கின்றது. எனக்குப் பின்னால் நீ அநாதையாயிருக்கையில் இவ்விரு சிறுவர்களையும் பாதுகாத்தற்கொரு பெண்மகள் இருத்தல் அவசியம். எனவே, சந்திரசேகர! என்பொருட்டும், காந்தாவின் அரு மைந்தர்கள் நிமித்தமும் நீ ஒரு மாது நல்லாளை மணத்தல் வேண்டும். உனக்கு மணத்திற் பிரியமில்லையென்று யான் அறிவேன். எனினும் எனக்குப் பின்னால் அல்லலுறாதிருக்க நீ அவசியம் ஒரு பெண்மணியை மணத்தல் வேண்டும். யான் ஒருத்தியைக் குறித்து வைத்துள்ளேன். உன்னுடைய காதலை காந்தாவினிடம் நாட்டிய நீ அவளைக் காதலிக்க ஒல்லாதென யான் அறிவேன். எனினும் அவளிடம் அன்பாயிருக்க ஒல்லும். சந்திரசேகர! நீ யென்ன கூறுகின்றாய்" என என்னை வினவினர். "அன்னாய்! உம்மை எதிர்த்துப் பேசி யான் அறியேன். எனினும், இம்மண விஷயத்தில் மறுக்கவே விரும்புவேன். மண வாழ்க்கையி லெனக் கிச்சையில்லை" என்று யான் பதிலிறுத்தேன்.

"மைந்த! உன்னுடைய பின் நன்மையைக் கருதியே நான் உன்னை மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்" என்று என்னுடைய அன்னை கூறிய உடனே என் மனங் கரைந்தது. என் கண்கள் கண்ணீரை உகுத்தன. "அன்னாய்! என்னை ஈன்றெடுத்து வளர்த்த என் அரும் அன்னாய்! நீரா என்னை—உம்முடைய மகனாகிய—என்னை வேண்டுகின்றீர்" என்று நான் கதறினேன். உடனே என்னுடைய அன்னை என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டு "என் கண்மணி! எனக்காக நீ மணஞ் செய்து கொள்" என்று கண்ணீர் சொரிய கேட்டார்கள். யானும் உடனே "அன்னாய்! உமதிஷ்டப்படியே செய்யும்" என்று கூறிவிட்டேன்.

ஜயகுமாரரே! பின்னர் சுந்தரவல்லியென்னும் உத்தமியை யான் மணந்தேன். அம்மாது நல்லாளும் எனக்கேற்ற மனைவியாக இருந்துவந்தாள். காந்தாவின் மீது யான் செலுத்தின மெய்க் காதலை அவள் பெறவில்லையெனினும், யான் அவளிடம் மிகவும் அன்பாகவே யிருந்துவந்தேன். ஈராண்டுகளுக்குப் பின்னர் அவள் எனக்கு ஒரு பெண் மகவை ஈன்றாள். அக்குழவிக்குச் சுலோசனை என்னும் பெயரும் அளிக்கப்பட்டது. பத்தாண்டுகள் கழிந்தன. சுலோசனை அழகினுங் குணத்தினுஞ் சிறந்த ஒரு சிறு பெண்ணானாள். மோகன சுந்தரமும் சுலோசனையும்

இணைபிரியா நண்பராயினர். அதுகாலை ஐயகுமாரரே! எனக்கு மீண்டுமொரு இடிவிழுந்தது. என்னுடைய மனைவி இறந்துபட்டாள். அவளிறந்த இரண்டு மாதங்களில் யான் என்னுடைய அன்னையையும் இழந்தேன்........சச!........ யானொரு அநாதையு மானேன். பெண் துணையன்றிப் பதினைந்தாண்டும், பதின்மூன்றாண்டும் நிறைந்த இரு சிறுவர்களையும், பத்தாண்டுகள் நிரம்பிய கண்மணி சுலோசனையையும் யானே பாதுகாக்க நேர்ந்தது. ஏற்ற பணியாளர்களுடன் யான் பெரிதுங் கஷ்டத்துடன் ஐந்தாண்டுகள் அவதியுற்றேன். பின்னர், ஷண்முக சுந்தரத்தையும் மோகன சுந்தரத்தையும் யான் கல்வி நிமித்தம் சென்னைக் கனுப்பினேன். ஐயகுமாரரே! யான் அவர்களைச் சென்னைக் கனுப்பியதற் காகவே வருந்துகின்றேன். சுலோசனை பெண் துணையன்றி யிருந்தமையால் தாய் தந்தையரை இழந்து நற்குலத்தில் பிறந்த சாரதா என்னும் பெண் மணியை யான் ஒரு மகளாகவுங் கொண்டேன். சுலோசனையும், சாரதாவும் உடன் பிறந்தவர்கள்போலும் ஒருவரை யொருவர் நேசித்து நின்றனர்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஒருவாறு இன்பம் எய்திநின்ற என்னை ஒரு பெருந் துயரடுத்தது. கல்வியின் பொருட்டுச் சென்னையிலிருந்த ஷண்முக சுந்தரமும் தூர்த்தருடன் கூடி, வேசியர் உறவையும் கள்ளின் தொடர்பையும் நாடினன் என்பது யான் அறிந்தேன். மேலும் செலவிற்காகப் பல மார்வாடிகளிடமும் அவன் கடன் வாங்கவுந் துணிந்தான் என்பதும் தெரிந்தேன். ஐயகுமாரரே! என்னுயிரினும் அரிய காந்தாவின் மைந்தனாகிய சண்முக சுந்தரம் தூர்த்தனாகியது உணர என் மனம் பதறியது. யான் ஒருநாள் சண்முக சுந்தரம் விடுமுறைக்கு மங்களபுரி வந்தவுடன் அவனை அழைத்து "மைந்த! சென்னையில் உன்னுடைய நடத்தை ஒருவாறாக இருந்ததெனக் கேள்வியுற்றேன். இது நியாயமா"? என்று வினவினேன்.

"தந்தாய்! யாரோ என்மீது வீண் பழி சுமத்தி யிருக்கின்றார்கள். நான் ஒரு பாவமும் அறியே"னென, அவன் கூசாது கூறினன். உடனே நான் அவனுடைய முகத்தை உற்று நோக்கினேன். சண்முக சுந்தரத்தின் எழில் வதனத்தை யான் அங்குக் காணவில்லை. ஒரு குடியனுடைய முகமே அங்குப் புலனாகியது. எனினும், காந்தாவின் எண்ணம் என்னகத்தி லுதித்தது. உடனே நான் அவனை நோக்கி "மைந்தா! இளமையில் நாம் தவறுவதுண்டு. அதற்குக் கூடா ஒழுக்கமே முக்கிய காரணமாகும். எனவே, மைந்த! நீ சகவாச தோஷத்தால் தவறியிருப்பின் உன்னுடைய ஒழுக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள். நீ சிறுவனல்லை. உனக்கிப்பொழுது வயது இருபத்திரண்டாகின்றது" என்றேன். அம்மொழிகளைக் கேட்டும் அவன் என்னை நோக்கி "அப்பா! ஒரு பாவமும் அறியா என் மீது நீர் வீண் சந்தேகங் கொள்கின்றீர்" என்றான். "ஆ! சண்முக! யானோ வீண் சந்தேகங் கொள்கின்றேன்? உன்னுடைய முகத்தை நோக்கும்போதே உன்னுடைய ஒழுக்கம் விளங்குகின்றதே. மேலும் சண்முக! நீ மார்வாடிகளிடத்துக் கையொப்பமிட்டு வாங்கிய கடன் பத்திரங்களும் என்னிடத்திலிருக்கின்றனவே. யான் உன்மீது வீண் சந்தேகங் கொண்டேனா?" என்று கேட்டேன். உடனே அவனுடைய முகம் மாறியது. ஒன்றும் பதிலுரையாது அறையை நீத்து வெளிச்சென்றான். ஐயகுமாரரே அன்றிரவு அவன் ஒருவரும் அறியாதவாறு மங்களபுரியையே விட்டுச் சென்று விட்டான். அவனிப் பொழுது எங்கிருக்கின்றானென யான் அறியேன். அவனுடைய இருப்பிடத்தைக் கண்டறிய யான் கொண்ட முயற்சிகளெல்லாம் அவலமாயின. எவ்வாறு அவன் சிறிதும் பொருளின்றித் தன்னுடைய வாழ்க்கையை நடத்துகின்றானோ யான் அறிகிலேன். அவன்



என்னைவிட்டுப் பிரிந்தது எங்களுக்குப் பெரும் விசனத்தையே யூட்டியது. வழக்கம் போல் மோகன சுந்தரமும் சுலோசனையும் ஒருவரை விட்டொருவர் பிரியாது விடுமுறையைக் கழித்தனர். விடுமுறை முடிந்ததும் மோகனசுந்தரம் சென்னைக்குச் சென்றுவிட்டான். சண்முகசுந்தரம் சென்று ஓராண்டுங் கழிந்தது. அவன் ஒருவேளை தற்கொலை செய்து கொண்டிருப்பானோ வென்றும் யான் எண்ணினேன். மோகனசுந்தரமும் பி.ஏ. பரீட்சைக்கெழுதிவிட்டு மங்களபுரி வந்து சேர்ந்தான். ஆனால் அதுகாலை, வழக்கத்திற்குமாறாக அவனுடைய முகம் மிகவும் வாடியிருந்தது. அவன் அவ்வாறிருக்கக் காரணமென்னவென்று யான் அறியவில்லை. வழக்கம் போல் அவன் சுலோசனையுடனும் பேசினனல்லை. அவனை ஒரு பெரிய வாட்டம் வாட்டி நிற்பது போலும் எனக்குத் தோன்றியது. அதனை யான் அறிய முயன்றும் அறிய இயலவில்லை. சில நாட்கள் கழிந்ததும் அவன் வழக்கம் போல் மலர்ந்த முகத்துடன் இருக்கத் தொடங்கினன். இவ்வாறு ஒரு மாதங் கழிந்தது. ஒருநாள் அதாவது நேற்று மாலை அவன் என்னை வாடியமுகத்துடன் அணுகி "அப்பா! அண்ணனைப்பற்றி ஒரு விஷயமும் தெரியவில்லையே" என்றான். உடனே எனக்கும் அடக்கற்கரியதுயரம் உதித்தது. "மோகன சுந்தர! யான் எவ்வளவோ முயன்றும் அவனிருப்பிடத்தை அறிய இயலவில்லையே; யானென் செய்வேன்?" என்றேன். உடனே மோகன சுந்தரம் வாடிய முகத்துடன் அப்படியே நின்றுகொண்டிருந்தான். அவனைச் சிறிது தேற்ற எண்ணிய நான் "மோகன சுந்தரம் என்னுடைய மூதாதை யொருவருடைய வெள்ளியுறையிட்ட வாளையும், தஞ்சை மன்னன் ஒருவனால் அவருடையபோர்த்திறத்திற்காக அவருக்கு அளிக்கப்பட்ட ஓர் அழகிய வைரமாலையையும் நீ பார்க்கவில்லையே. நீ சென்று சுலோசனையையும் சாரதாவையும் அழைத்துக் கொண்டு என்னறைக்கு வா" என்றேன்.

சிறிது நேரத்தில் சுலோசனையும் சாரதாவும் மோகன சுந்தரத்துடன் என்னறையடைந்தனர். உடனே யான் அவ்வறையில் புதைக்கப்பட்டிருந்த இருப்புப்பெட்டியைத் திறந்து அதில் இருந்த வெள்ளியுறையிட்ட பெரும் வாளையும் வைரமாலையையு மெடுத்து வெளியில் வைத்தேன். அவைகளைக் கண்டதும் மோகனசுந்தரமும் மற்றவர்களும் ஆச்சரியமடைந்தனர். அவ்வாளின் கைப்பிடி வைரமிழைத்துத் தங்கத்தால் செய்யப்பட்டது. அம்மாலையில் "தஞ்சைமன்னன் அளித்தது" என்னும் எழுத்துக்கள் பதிக்கப்பட்டிருந்தன. மோகனசுந்தரத்தின் வாட்டம் வாடியது; அவனுடைய முகம்மலர்ந்தது. "அப்பா! இவ்விரு பொருளும் குறைந்தது ஐம்பதினாயிரம் ரூபாய் பெறுமன்றோ?" என்று அவன் என்னை வினவினன். "ஆம்" என்று யான் கூறினேன். அதுசமயம் அடுத்த அறையிலிருந்த டெலிபோன் மணி ஓயாமல் அடித்தது. மோகன சுந்தரம் சென்று என்னையாரோ ஒருநண்பர்அவசியமாகப் பேசவேண்டி யிருத்தலான், உடனே டெலிபோனுக்கு வந்திடுமாறு கூறியதாகக் கூறினன். யான் அப்படியே அவ்விரு பொருள்களையும் விட்டுவிட்டு அறையை விட்டுச் சென்றேன். டெலிபோனில் பேசி முடிந்ததும், ஒரு நண்பர் என்னைப் பார்க்கவந்தார். எனவே, யான் அறைக்குச் செல்லாது அங்கு உட்கார்ந்து பேசலானேன். சிறிது நேரத்தில் மோகனசுந்தரம் என்னிடம் இருப்புப்பெட்டியின் சாவியை யீந்து அவ்விரு பொருள்களையும் பெட்டியுள் வைத்துவிட்டுப் பூட்டியதாகக் கூறிச் சென்றான். அவன் "பூட்டிவிட்டேன்" என்றுகூறுங்கால்அவனைச்சந்தேகித்தேனில்லை; இப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகஞ் செய்வானென யான் அறிந்திருப்பின் உண்மையில் அவ்விரு பொருள்களும் அங்கிருந்தனவா என யான் பார்த்திருப்பேன். அத்தகைய சந்தே

கம் எனக்கில்லாமையான் யான் அவனை நம்பினேன். ஆனால் ஜய குமாரரே! இன்றுகாலை 8-மணிக்கு...."

"இருப்புப் பெட்டியைத் திறந்து நோக்குகையில் அங்கு வாளையும் வைர மாலையையும் நீர் காணவில்லை யல்லவா?"

"ஆம் அவைகளுடன் சுமார் ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொன் நகைகளும், சுமார் ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்களும் இருப்புப் பெட்டியிலிருந்து களவாடப்பட்டிருந்தன. மேலும் மோகன ரங்கன்-காந்தாவின் இரண்டாவது புதல்வனாகிய இக்கள்வனும் சுலோசனையின் காதலனாகிய இந்நன்றி கெட்ட நாயும், துரோகியும், எங்கோ ஓடிவிட்டிருக்கிறான்."

"எனவே மோகனசுந்தரமே கள்வனென நீர் எண்ணுகிறீரோ?"

"ஆம் அதற்கென்ன சந்தேகமிருக்கிறது?"

"இன்றுகாலை நீர் இருப்புப் பெட்டியைத் திறக்குங்கால் இருப்புப் பெட்டியின் பூட்டுப் பூட்டப் பட்டுத்தானே இருந்தது?"

"ஆம்."

"அப்பொழுது மோகனசுந்தரம் உம்மிடம் அவ்விருப்புப் பெட்டியின் சாவியை அளிப்பதன் முன்னரே வாளையும் மாலையையுங் களவாடியிருத்தல்வேண்டுமன்றோ?"

"ஆம்."

"நீர் நேற்று உம்முடைய அறையை விட்டு வந்தபின் எவ்வளவு நேரங்கழித்து மோகனசுந்தரம் உம்மிடம் அப்பெட்டியின் சாவியை யளித் திருப்பான்?"

"சுமார் பத்துநிமிஷங்கள் கழித்து"

"அவ்வாறு அவன் உம்மிடம் சாவியை யளிக்கையில் சுலோசனையம்மாளும் சாரதாவும் உடனிருந்தார்களா?"

"நான் அறியேன். ஆனால், அவன் தனிமையாகவேவந்து என்னிடம் சாவியை யளித்தான்."

"அப்பொழுது நீர் ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தீ ரல்லவா?"

"ஆம்."

"நேற்றிரவு நீர் இறுதியாக எத்தனை மணிக்கு மோகன சுந்தரத்தைப் பார்த்திருப்பீர்?";

"சுமார் பத்து மணிக்கு."

"இன்று காலை எத்தனை மணிக்கு அவன் அரண்மனையை விட்டுச்சென்று விட்டான் என்றறிந்தீர்."

"காலை 8-மணிக்கு."

"பிரபுவே! சாதாரணமாக மோகன சுந்தரம் காலையில் எத்தனை மணிக்குத் தினமும் எழுவது வழக்கம்?"

"காலை 6-மணிக்கு."

"நீர் உம்முடைய அறையை இரவில் பூட்டிடுவது வழக்கமா?"

"ஆம்."

"இன்று காலையும் அவ்வறை வழக்கம் போல் பூட்டப்பட்டுத்தான் இருந்ததோ?"

"ஆம்."

"எனவே, நீர் எண்ணுவது போலும் நேற்று உம்மிடம் அவ்விருப்புப் பெட்டியின் சாவியை அளிப்பதற்கு முன்னரேயே அவ்விரு பொருள்களையும் ரூபாயையும் ஏனைய நகைகளையும் மோகன சுந்தரங் களவாடி யிருத்தல் வேண்டுமன்றோ?"

"ஆம்."

"உம்முடைய அறைபூட்டப்பட்டிருக்கையில் அவ்வறைக்குள் செல்வதற்கு வேறு வழியுண்டா?"

"ஜயகுமாரரே! என்னுடைய அறைக்குச் செல்வதற்கு ஒரே வழிதான் உண்டு."

"அப்பொழுது பிரபுவே! நீர் மோகன சுந்தரமே உம்முடைய இருப்புப் பெட்டியிலிருந்து பணத்தையும், வாளையும் மாலையையுங் களவாடினன் என்றெண்ணுகின்றீரோ?"

"ஆம்."

■



"அவன் திடீரென மறைந்ததே அவ்வெண்ணத்தைவலியுறுத்துகின்றதென நீர் எண்ணுகின்றீரோ?"

"ஆம். இருப்புப் பெட்டியும் அறையும் பூட்டப்பட்டவை பூட்டப்பட்ட நிலைமையிலேயே இருக்கின்றன. வேறு வழியாக ஒரு கள்வன் அறையுள் நுழைந்தானென எண்ணுவதற்கும்வதுவில்லை. எனவே! பணவாசையால் உந்தப்பட்டு மோகன சுந்தரமே அவ்வாறு செய்திருப்பானென்பதற் கையமில்லை. மேலும், ஜயகுமாரரே! நேற்று அவனுடைய முகம் மிகவும் வாடியிருந்ததெனக் கூறினேனே! அது உம்முடைய நினைவிலிருக்கும். மேலும், இம்முறை அவன் சென்னையிலிருந்து விடுமுறைக்கு மங்களபுரி யடைந்தபோது அவன் வாடியே இருந்தான். எனவே, அவனுடைய உடன் பிறந்தோனைப்போலவே இவனும் கெட்டுவிட்டிருக்கின்றானென்றே யான் எண்ணுகின்றேன். சண்முக சுந்தரம் தவறியதை யான் உணர்ந்துவிட்டேன் என்பது தெரிந்து ஓடி மறைந்தான். பசு தோல் போர்த்த இப்பாதகனே சுமார் அறுபதினாயிர ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் களவாடி மறைந்தான். ஜயகுமாரரே! காந்தாவின் வயிற்றில் இப்பாதகர்கள் பிறந்தமைக்கே நான் வருந்துகின்றேன். அவ்விருவரையும் இளமையிலிருந்து பெற்ற தாயைப் போலும் யான் வளர்த்ததின் பயன் இதுவே யாகும். ஜயகுமாரரே! இப்பாதகனை நம்பி என்னருமைச் சுலோசனையும் மோசம் போனாள். இளமையிலிருந்து இவனையே நான் மிகவும் நேசித்தேன். என்னுடைய எண்ணங்கள் அவலமாயின. சுலோசனையும் மோகனசுந்தரமும் ஒருவரையொருவர் காதலிப்பதை யானறிவேன். யானும் காந்தாவும் எவ்வாறு ஒருவரையொருவர் காதலித்திருந்தோமோ அத்தகைய காதலையே இவர்களிருவரும் கொண்டிருக்கின்றார்கள். இக்காதல் மணத்தை முடித்து இன்புறலாம் என்றெண்ணி நின்ற எனக்கு இப்பேரிடி விழுந்தது. ஜயகுமாரரே! என் வாழ்க்கையைப் போலும் இடிப்புண்ட வாழ்க்கையும் உலகில் உண்டோ! பட்ட காலிலேபடும், கெட்ட குடியே கெடும் என்ற மெய்ம்மொழி என்பால் மெய்த்தது. நான் இவ்வுலகத்தில் இருத்தலினும் இறத்தலே நன்று."

"பிரபுவே வருந்திப் பயனென்?"

"ஜயகுமாரரே! பல்லாண்டுகளாகப் பரம்பரை பரம்பரையாக மாறி மாறி என்னிடம் வந்த இவ்விலை யுயர்ந்த வாளையும் மாலையையும் நான் எவ்வாறாயினும் பெறல்வேண்டும். அம்முயற்சியில் மோகனசுந்தரம் கள்ளர்க்குரிய தண்டனையை யடைந்திடினும், நான் சிறிதுங் கவலை கொள்ளேன். அக்கள்வனைக் கண்டுபிடிப்பது உம்முடைய பாரமேயாகும்."

"பிரபுவே! இதுகாறும் நீர் கூறியவைகளிலிருந்து உம்முடைய சரிதம் எனக்குப் பெருந்துயரையே அளிக்கின்றது. உமக்கு என்னாலியன்ற உதவியைப் புரிந்து உம்முடைய வாழ்க்கையில் மங்கிக்கிடக்கும் இன்பத்தைத்தூண்டி, உம்முடைய வாழ்க்கையைப் பண்படுத்த நான் துணிவேன். அன்புமயமாய், தளராத சமயமெலாம் எதிர் வழக்கிட நின்றிடும் இறைவனருளைப் பெறுதற்குத் தொண்டே துணைக்காரணமென யானறிவேன். அறிவு துலங்கியதிலிருந்து யான் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னுங் கொள்கையையே கடைப்பிடித்து நிற்கின்றேன்."

"ஜயகுமாரரே! உம்முடைய துப்பறிதிறனை உலகம் அறிந்திருக்கின்றது. மேலும் இவ்விஷயம் இரகசியமாகவே நடத்தல்வேண்டும். சுலோசனை, மோகனசுந்தரம் கள்வனென வறியலாகாது."

"பிரபுவே! இக்களவை யான் கண்டறிந்திடற்கு மங்கள புரிக்கே வந்து சில நாள் தங்கி நிற்றல்வேண்டும். நான் நாளை காலை 6-மணிக்கு மங்களபுரிக்கு வருவேன். நான் உம்முடன் படித்த நண்பன் என்றும், என் பெயர் மதன கோபாலனென்றும், நான் ஒரு பெரிய வியாபாரி யென்றும் நீர் பிறரிடத்தில்

கழிடும். மணி ஒன்பதாகின்றது. பிரபுவே! நீர் கவலையற்றிரும். இறைவனருளால் சில தினங்களுள் யான் உம்முடைய கவலையை அழிக்கின்றேன்."

"ஜயகுமாரரே! நான் சென்று வருகின்றேன். நாளை காலை 9-மணிக்கு மங்களபுரியில் சந்தித்து மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம்."

"பிரபுவே! அவ்வாறே செய்திடும். உம்முடைய கவலைகள் ஒழியக் கருணாகரன் அருள்க"

# நவசக்தி உதயம்

## [ஸ்ரீ சுத்தானந்தபாரதி]

உலகம் புத்துயிர் பெற்று வருகிறது. அப் புத்துயிருக்குயிராவது பாரத சக்தி. பாரத சக்தியாவது அத்யாத்ம யோகசக்தி. அதுவே பூரணயோகத்தில் மலர்ந்து மனிதவாழ்வை அறிவழுத்தூட்டி. அமர வாழ்வாக்கி, இவ்வுலகிலேயே விண்ணரசை நாட்டவல்லது. அந்தச் சக்தியாலல்லது வேறு எதனாலும் உலகிற் சமரஸமும், ஒற்றுமையும் அமைதியு மியலாது. இப்போது ஆத்ம சக்தியென்று சொல்லப்படுவது அதன் எதிரொலியே. இப்போது நீதிநெறி (Moral force) ஆத்மசக்தியென உலவுகிறது. உண்மையான ஆத்ம சக்தி, (Spiritual force) ஆத்யாத்ம வீரக் கனல், எழுந்தால் உலகம் திடீரெனப் புத்துயிர் பெறும். உலக சமுதாயங்கள் ஒவ்வொன்றிலும் சிற்சிலருக்கு அந்தச் சக்தி உதிக்கிறபோதும், அதன் தவக் கனல் அச்சமுதாயம் முழுவதையும் திருத்திவிடும். உதாரணமாகத் தற்காலத்தில் எவ்வளவோ உழைப்புடன் ஒரு நீதித் திருத்தத்தை, (Moral reform) பலநாள் பாடுபட்டுச் சிறிது பயன் பெறமுடிக்கின்றனர். புத்தர், ஏசுநாதர், ஞானசம்பந்தர் போன்ற தெய்வசக்தி வீரர் எழுந்தால் சில நாட்களில் பெரிய மாறுதல்களை உண்டுபண்ணுகின்றனர். இத்தவக்கனலே பாரத நாட்டின் வெற்றித்திறல்; வேறல்ல. இதையே வளர்க்க எல்லோரும் உறுதி கொள்ளவேண்டும். "யோகம்! யோகம்! யோகம்!" இதுவே நவசக்தியின் திருவாசகம்.

யோகம் என்றால் காட்டிற் கோடிக்காயக் கிலேசஞ் செய்வதென்று அறியார் அஞ்சுவர். யோகமென்பது கடவுளுடன் நம்மை ஒன்றுவித்து அவனுடைய இன்ப விரிவாகவே வாழ்வை நுகர்வது. "நோக்கரிய நோக்காய், நுணுக்கரிய நுண்ணுணர்வாய், தோற்றச் சுடரொளியாய், "கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச் சிறந்தடியார் சிந்தனையுட்டேனூறி நின்று" அன்பருக் கன்பாய், மெய்ஞ்ஞானமாய் மிளிரும் மெய்ச் சுடராகிய ஒரு சக்தி சிவனை, சச்சிதானந்தப்பரம்பொருளை,

உள்ளே யிலகி யுயர்ந்திடுமச் சோதியினை
யுள்ள வுறவாலே யுணர்.

என்றுங்கு, உள்ளுறவிந்து, முற்றும் அவனுக்கே யூணுகி, அவன் கையில் தன்னையும், தனது விருப்பங்களையும் உலக கலத்தையும் ஒப்புவித்து நூறு பேர் தவம்புரியின் உலகிற்கு அளவற்ற பயன் பிறக்கும். உலக வாழ்வை இன்புறுத்தும் கலை, கல்வி, கவி, பண், கூட்டுறவு அனைத்திற்கும் அக்கடவுளுறவே அடிப்படையாகும். காலம் நெருங்கியிருக்கிறது. தற்கால நாகரிகப் போக்கில், மனிதன் வாழ்வை ஒரு குறிப்பின்றி, எல்லையின்றிப் புறப்படுத்தித் தனது நடுநிற்கும் வள்ளலை, இன்பப் பொருளை மறந்து, இன்பத்தைப் புறத்தே தேடித் தேடி அலைந்து அலைந்து, முடிவில் புறத்தே இன்பங்காணாது, உள்முகமாக வாழ்வைத்திருப்ப, ஒரு பசியெடுத் தலை



யும்நிலை வந்தே தீரும். மேனாட்டினும் பலருக்கு அப்பசி யெடுத்துள்ளது.

உலகில் வாழவே வேண்டும்; ஆனால் அதை ஆன்ம மலர்ச்சியாக, - கடவுள் வழிபாடாகக்கொண்டு வாழவேண்டும்.

உயிர்மேனி யாக்கொண்டே
யோங்குமொரு சோதி
பயிலா லயமுலகு பார்.

உலகே கோயில்; ஆருயிர்களே ஆண்டவன் திருமேனி; எல்லா வுலகிற்குமிறைவனொருவனே; எல்லாவுடலும் இறைவனாலயமே என்ற அனுபவமே உலக வொற்றுமைக்கு உயிராகும். இவ்வனுபவம் எய்தல் கடினமல்ல. தன்னலம், பொறாமை, அகந்தை, தற்பெருமை, சினம், வீண்வாதம், இவற்றைவிடுத்து, உலகை நடத்தும் ஒரு மஹா சக்தியுள்ள தென்று நம்பி, அதுவே நம் மூலம் அனைத்தையும் செய்கிறதென்று உறுதி கொண்டு, செய்யுந் தொழிலை (தனது ஜீவனத்திற்குப் பயன்படும் எந்தொழிலாயினுஞ் சரி) "ஆண்டவன் கோயிற்றிருப்பணி, அவனே நம்மூலம் இதைப் புரிகிறான், இப்பணி எனக்கேயன்று, இவ்வுலகக் குடும்பத்தில் யான் ஒரு உறவினன், என் வாழ்வு, என் இன்பம், என் வெற்றி எல்லாம் கடவுளையே தந்தையாகக் கொண்ட இவ்வுலகக் குடும்பத்தையே பொருந்தும், யான் தனி மனிதனல்ல, கடவுளின் உடலான மனிதத் தொகுப்பின் ஒரு சிறு உறுப்பே யான், எனக்குத் தனியகந்தை நான் எனும் உணர்வு இல்லை, அவன் இச்சையின் கருவியே யான்,

மைப்பணமும் போன்றே பரும வுடலுயிரை
மெய்க்கடவுள் மெய்த்தொண்டிற் பெய்.

என்றுங்கு, முழுதும் அடைக்கலமாகி, அவனைக் கலந்து வாழ முயன்றால், உலகம் முழுதும் அவனிச்சை தடையின்றி நடைபெறும். உலகின் பெருந்தொழிலாளனாகிய, எல்லாம் வல்லவனாகிய, எங்கும் நிறைந்த சக்தியான அவனைக் கலந்து அவனில் வாழ்ந்தால், உலகம் அவனருளாலயமாகும்; அவனுடைய சிற்சபை யுலகம், ஆனந்த நடன சபையாயிலங்கும். பூத கணங்களெல்லாம் அவனுடைய திரு நடனானந்தத்தைத் தமது உள்ளும் புறமும் காண்பர். உலகின் தோற்றங்களும், மாற்றங்களும், ஏற்றங்களும், வாட்டங்களும், ஆட்டங்களும், ஓட்டங்களும், பிற எல்லாமும், அவனுடைய திரு நடனத்தின் ஓர் அபினயம்—ஒரு காலசைவு என்றே யுணருவர்.

இரண்டு சக்திகள் ஒன்று சேர்ந்தே உலகம் முன்னேற வேண்டும். ஒன்று, ஆத்ம சக்தி; மற்றொன்றுதெய்வ சக்தி. அது யோகத்தால், உள்ளே கடவுளுறவால், கடவுட் காட்சியால், கடவுளன்பறிவுப்பணியால் கனல்வது. இந்தச் சக்தியே பாரத சக்தி; இதுவே உயிர்களனைத்தையும் ஒரு பரம்பொருளில் இணைப்பது; இதுவே உலகோர் உள்ளங்களனைத்தையும் ஒரு நீண்ட மலர் மாலையாகத் தொகுத்து அகண்ட சக்திப் பெருமானுக்கு அணிவிக்க வல்லது. இந்தச் சக்தியே இந்தியாவின் திரு, வீரம், திறமை, உரிமை எல்லாம். இந்த சக்தியைத் தேடியே மேனாடும் இந்தியாவைப் பணிந்து வந்து கொண்டிருக்கிறது. இந்தச்சக்தியே சிக்காக்கோ சர்வமதச்சபையில் வேதாந்த சிங்கமாக முழங்கி ஒரே நாளில் பாரத நாட்டின் பெருமையை உலகறிய விளக்கியது. இந்தச் சக்தி விளங்கிய நாட்களிலே தான், வேத முனிவரும், தமிழ்ச் சித்தர்களும் நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும், அசோகர்களும், இராஜராஜர்களும், சுந்தர பாண்டியர்களும், வள்ளுவர், சேக்கிழார், கம்பர், காளிதாசர் போன்ற மகா கவிகளும், உலகம் என்றும் வியக்கும் ஒப்பற்ற கலைப் புலவர்களும், வெற்றி வீரர்களும், செல்வ வாணிகர்களும் நமது பாரதநாட்டை அலங்கரித்தார்கள். இந்தச் சக்தியின் வீறு கொண்டே ஞான சம்பந்தப் பாலகன்,

"மானி னேர்விழி மாதராய் வழு
திக்கு மாபெருந் தேவிகேள்:—
பானல் வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீபரி வெய்திடேல்!

ஆனை மாமலை ஆதியாய
விடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன்அ லேன்திரு
ஆல வாய்அரன் நிற்கவே"

என்று துணிந்துரைத்தார். அன்பர்காள்! நாமிழந்தபெருஞ் செல்வம் எது? நாடல்ல, கலையல்ல, வேறல்ல! இவற்றிற்கெல்லாம் உயிரான, கண்ணிற்குக் கண்ணான ஆன்மச் செல்வத்தை—கடவுட் செல்வத்தை இழந்து விட்டோம்! அந்தோ! உலகனைத்தையும் இயக்கும் இறைவனை, உள்ளிருந்தும் உள்ளாது, கண்ணிருந்துங் காணாது, உணர்விருந்தும் உணராது, அறிவிருந்தும் அறியாது அவலமானோம். யோசித்துப் பாருங்கள்! உலகில் பெரும் பொருள் யாது? அனைத்தையும் இயக்குவது யாது? அனைத்துள்ளும் உயிர்க்குயிராய் நிற்பதெது? யாங்கணும் கோயில் கொண்டொளிர்வதெது? எல்லாம் வல்ல அந்தப் பெரும்பரம்பொருளை, மனமார அடைந்து "இறைவனே! யான், எனது வாழ்வு, உலகு, உலகின்பம் எல்லாம் நீ! என்னை யாட்கொள்! உன்னிச்சையை என் மூலம் நடத்து; என்னகந்தையை இதோ உனக்குப் பலியிட்டேன். நீயே புகல், நீயே யுறுதி,

"எத்தனை யிடர்வரினும் எக்கொடிய நோய்
என்னென்ன இன்னல் வரினும் [வரினும்
எழ்மை வரினும் பிறரிகழ்ச்சி வரினும்வுடல்
இளைத்தென்பு மருகி விடினும்
வெற்றிவரினும் தோல்வி வெட்சம்வரினும்
வெம்பசி எனை வாட்டினும் [உட்க
வேறின்றி யுன்னைக் கலந்தமெய்க் காதலில்
வெறுப் பொன்று முண்டாகுமோ?
எத்திசையும் எக்கணமும் எவ்விடமும் என்
யீரறக் கூடி நின்றாய்! [னுளே
இன்பனே நண்பனே யிறைவனே பரமனே
எல்லாம் உனக் காகுக! [மோ?
தொத்துறு துயர்க்குலத் தாசியெனை அணுகு
பரிதியைச் சூறை தொடுமோ?
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பாவு சோதி மலையே"

என்று அவனடியிலுறைந்து அவனன்பிற் கரைந்து, அவன் நிறைவில் நிறைந்து, அவ்வுணர்வில் வாழ்வதேயோகம்.

யோகமென்பதை முற்றிலும் பிழையாகப் பொருள்கொண்டு "அம்மம்ம! நாடு முன்னேற வேண்டாமா, வீடு விளங்க வேண்டாமா, தொழில் நடக்க வேண்டாமா, கலை, சிற்பம், கவி, சித்திரம், பயிர், வாணிபம், படைப் பயிற்சி, ஆட்சி, முதலியவை நடக்க வேண்டாமா! உலகில் பலபல மின்சார அற்புதங்கள் நடக்கின்றன! ஆகாயத்திற் பறக்கிறார்கள்—பெருங் கப்பல்களைக் கட்டுகிறார்கள்—பல யந்திரங்களை நிறுவுகின்றனர்—கால தேசங்களை வெல்லுகின்றனர்—யோகத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டிருந்தால் உலகம் நடைபெறுமா" என்பது பல உலகாயதர்களின் பலகால வினா? இவ்வினாவிற்கு ஆதாரம் என்ன? யோகம் என்பது சந்நியாசியாகிக் காட்டிற்குப் போவது என்பதே, தானும் மொட்டையிட்டு, உலகையும் மொட்டையிட்டுப் பெண்களைப் பழித்து, உலகு பொய், வாழ்வு வஞ்சம், எல்லாவற்றையுமொழித்து,ஒரே யடியாகப் பரலோகம் செல்வதே நலம் என்னும் மாயமே இதன் காரணம். அன்பர்களே! பரலோகத்தையே மறந்து விடுங்கள். யோகமென்பது உலகை வெறுத்து வாழ்வைச் சூன்யமாக்குவது என்னும் மாயாவாதத்தைக் காலிகொண்டு எற்றியெறியுங்கள். யோகமென்பது மூக்கை வருத்தல், மூச்சைப் பிடித்தல், ஆசனங் கட்டிக் களைக்கூத்தாடி வித்தையாடல், வயிற்றைக் குறுக்கல், வாசியடக்கல், உண்டி சுருக்கல் என்னும் தப்பெண்ணங்களையும் உடனே ஒழித்து விடுங்கள்! இவை யோகமல்ல, அல்ல, அல்ல!

கனலிட் டொளத்திற் காணுதங் கொளியாய்
புனலிற் குளிரெனப் பூவில் மணமென
அனலிற் சூடென் றறிவிற் கதிர்வாய்
நினைக்க நினைக்க நினைப்பிற் கமுதாம்
உள்ளத் ததுவே துள்ளி நடஞ்செயும்
உள்ள வுள்ள வெள்ளமாய் வளரும்
கள்ளமொன் றில்லை! காண்குது சோதி
மெள்ளப் புணர்மின் விள்ளற் கரிய
இன்ப மதுவே! எழில்மெய் யதுவே!
பொன்போற் பொலியும் பொருந்திடு மூட
அன்பறி வருளா யதுவே வளர்க்கும் [லம்;



நின்பாரஞ் சுடரைச் சேரவா ரீரே!
அலைந்த மனத்தை யுளந்தனி லூன்றிக்
கலந்த கலப்பிற் கடவுளோ டொன்றி
நிலந்தனி லமரராய் நீடின்ப மெய்தி
நலந்தரு வாழ்வினை நயமுறல் யோகம்.!

இந்த யோகம் யாருக்குப் புளிக்கும்! பாமரனாகினும் சிறிது காலம் எப்படியேனும் தியானத்தை மேற்கொண்டால் உள்ளத்தில் ஒரு திடப் பொருளைக் காணுவான். அதையே நம்பி முயன்றால், அப்பொருளே அவனுடைய பொய் முயலகனை நசுக்கி, மானென்றலையும் மனத்தை உள்ளூறும் தனது இன்பத்தில் நிறுத்தும். அதன்பின் அனல்காணும்; சோதிகாணும்; நாதங் காணும்; ஆண்டவனின் அருட்கரங் காணும்; தடுத்தாட்கொள்ளுந் திருவடி காணும்; அதன்பின் சிற்சக்திக் கனல் வெள்ளம் பெருகும்; அக்கனலுடன் பரமனருள் கங்கையெனப் பொழிந்து மனிதனைக் கடவுட் டன்மைக்குப் பண்படுத்தப் பொன்னொளிரச் செய்யும். அஃதாயின் அவனே அத்தகைய சக்தி நிலையமாகிப் பலருக்கு அந்த அருளைப் பாய்ச்ச வல்லவனாவன். அவனைச்சுற்றியுள்ள அன்பர்குழா மனைவரும் அச்சக்தியில் அவ்வுள்ளுறவில் ஒன்றுபட்டு உடல் வேறாயினும் உயிரின்பம் ஒன்றாக வாழுவர். இப்படிப்பட்ட சக்திமைந்தர்கள் ஆங்காங்கு யோகவிளக்காக நிலவினால் மக்கள் மரபு தானே புனிதமுறும். உலகின் தொழிலும் நிறைவுற்று நடக்கும்.

சற்று ஆராய்மின்! கலைகளும், கவிகளும், தொழில்களும் வளம்பெறும் இரகசியமென்ன? ஒரு யோக விளக்கைச் சுற்றியே அவை வளர்கின்றன! புத்தர் தோன்றினர். அவர் பெயரால் எண்ணிறந்தகலைகள், கவிகள், தொழில்கள், ஆட்சிகள் எங்கும் பரந்து நிகழ்ந்தன. அவர் சக்தி, ஒரு அசோகனைப் படைத்தது! ராமதாசரின் தவம் சிவாஜியைப் படைத்தது. ஒரு பரமஹம்ஸர் உதித்தார்; அவருடைய சக்திக்கனலால் இன்று நடக்கும் ஆக்கவேலைகள் கண்கூடு. அந்தச் சக்தியை ஒரு தேசமே முழுதும் வளர்த்தும் நிலவினால், அதன் ஆற்றலுக்கு எல்லையுண்டோ? அன்பர்களே! கந்தகப்புளிப்பில் செம்பையும், துத்தநாகத்தையும் நிறுவி, செப்புக் கம்பிகளால் இணைக்கவே மின்சாரம் புலப்பட்டு விளக்கெரிகிறது; மணியடிக்கிறது. அது அச்சுயந்திரத்தை இயக்குகிறது; மாந்தர் மனதையே வியப்பினால் விழுங்குகிறது! பார்க்கப்போனால் அது சடசக்தி. (Material energy) இந்தச் சடசக்திக்கே இவ்வளவு வலிவிருக்குமாயின் கடவுட் சக்திக்கு உள்ள வல்லமையை எண்ணப்போமோ; எண்ணப் போமோ; ஏழை மனத்தால் எண்ணப் போமோ? அந்தச் சக்தி பெற்ற ஒரு சுத்தாத்மாவினால் உலகம் அற்புதமான திருந்தமடையும். ஒரு சம்பந்தர் உதித்தார், ஞானப்பிள்ளை—அவர் செய்து சென்ற அற்புதத்தைப் பாருங்கள்!

தான் கனியாது 'நான் உலகைக் கனிவிக்கிறேன்' என்றுகூறி முன்வரும் செருக்கும் 'இறைவன் ஒருவன் தனது சக்தியால் அனைத்தையும் ஆக்குகிறான்; நான் அவன் கருவியே' என்றெண்ணாது, 'நானே அனைத்தையும் செய்கிறேன்' என்னும் அசுர மாயையும் சிலநாள் வாணவேடிக்கை செய்து கறியாகிவிடும். உள்ளும் புறமும் நிலவும்இறைவன் கழலேத்தி, அவன் கழலே இடம்பெறுவுலகமாகக்கண்டு, அவனுயிர்ப்பே உயிர்ப்பாய் வாழ்ந்து, அவனின்பமயமே—சிவமயமே—எல்லாம், எங்கும், எதுவும், எனக்கண்டு, அக்காட்சியில் அவனுடைய யோகக்கனலோங்க வாழுதலே இன்பத்துளின்பம். அரசன் கணையல்ல! தொழிலின் திறமல்ல! மனிதனின் அகந்தை வலிவல்ல; இறைவன் அருளே உலகைத் தாங்குகிறது! அவ்வருள் எங்கும் கடல்போல் நிரம்பித் ததும்புகிறது! நின்ற நிலையிலேயே அஃதெழுதும்; உள்ளத்தை அகந்தைக் கல்லால் அடைக்காமல், அன்பு மடைதிறந்தால் ஆழி யெனப் பாயும்! இது சத்தியம்! இந்தச்சக்திபெற்றால்தான் நாம்நம்மைப் பாரதநாட்டார் என்று சொல்ல வுரியரா

வோம். இந்தச் சக்தி பரம ஹம்ஸருள் நிலவியது; அருட்சோதி வள்ளலாரிடம் பாடியது; விவேகானந்தரிடம் கர்ச்சித்தது. ஆனால் இந்தச் சக்தி இன்னும் தனது வேலையை நிலையாகச் செய்யத் தொடங்க வில்லை. ஒவ்வொருவரும் அதைப் பெற்று இன்புற வேண்டும். எல்லாரும் பரம ஹம்ஸர்களாக வாழ வேண்டும். மொட்டை யடித்துக் காவி யுடுத்தித் திருமடங்கள் நிறுவினால் மட்டும் பயனில்லை. உலகவாழ்வின் ஒவ்வோரணுவிலும் அந்தச் சக்தி நிலவச் செய்தல்வேண்டும். உழவு, நெசவு, அச்சு, விற்பனை, ஆட்சி, புலமை எல்லாம் யோகமாக வேண்டும். இதுதான் உலகம் புத்துயிர் பெற்று வாழும் வழி. இதுதான் மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் வழி. மேனாட்டின் சடவிளக்கமும், பாரதநாட்டின் ஆன்ம விளக்கமும் திருமணம் புரிந்து சக்தியும் சிவமும் போல் பொருந்த வாழும் இரகசியம் இதுவே!

ஆனால் உலகிலேயே கடவுள் வாழ்வைக் கொணர மனிதனின் மனவலிமை மட்டும் போதாது; ஹடயோகத்தால் உடலுயிர் வலிமை யெய்தும்; ராஜயோகத்தால் மனவலிமையும் குண்டலி சக்தியும் பிறங்கும். இது போதாது; இந்த யோகத்தால் உலக வாழ்வனைத்தையுமே யோகமாக்க முடியாது. பக்தி, ஞான கர்ம யோகங்களும் தற்காலத்தில் உலகைத் தப்பி விண்ணிற் குதிக்கும் பரலோக விருப்புடனேயே கருதப்படுகின்றன. இவ்வுலகில், எல்லாத் தொழில்களையும், எல்லா மக்கள் வாழ்வையும் யோகவுணர்வில் ஊன்றி, வானுலகின்பத்தை உள்ளும் புறமும் நாட்ட வேண்டும். உடம்பினில் உத்தமனைக் காணவேண்டும் என்று உறுதிகொள்ள வேண்டும். அதற்கு வேண்டியது தீவிரமான கடவுளன்பு, உண்மையான ஆர்வம், முற்றிலும் அகந்தையை வேரோடு களைதல், ஆண்டவனுக்கு மீளாவாளாகச் சரணடைந்து விடுதல், அவனன்றி யானில்லை, எதுவுமில்லை, அவனிச்சை அனைத்தையும் நடத்துகிறது என்று அவனைத் தூய வுள்ளத்துடன் தியானித்தல். (தினம் ஒருமணி நேரமாவது தனியிடத்து அமைதியாயிருந்து தியானித்தால் நாளுக்கு நாள் நலமெய்தும்;) செய்யுந் தொழில்கள் எதுவேனும், அதன் பலனில் பற்றறல், அத்தொழிலையும் அவனுக்கே நிவேதித்தல், அனைத்துயிர்களையும், அவன் மயமாகக் காணல், ஆனால் எதிலும் பாசவுறவு கொள்ளாதிருத்தல், வீண்மை யொழித்தல், அடக்கமும் அமைதியும் பழகல், நல்லோர் கூட்டம், நல்லோர்பணி, உலகம் அமர வாழ்வடைதல் வேண்டும்.

> அறமும், அறவோர், அறச்செயலும் பூவில்
> உறவுற்று வாழ்க வுவந்து

என்று எப்போதும் எல்லோர் நலத்திற்காகவும் ஆண்டவனை ஆர்வமுடன் வழுத்துதல்—இவையே.

உலகின் வேற்றுமை, இடும்பை, இடர், துயர் எல்லாம் எதனாலுண்டாவன? அகந்தையால்—நான், எனது, எனக்கு என்னும் அகந்தையால். மனமே இவ்வகந்தை வடிவு. வேற்றுமையல்லலைச் சிதைக்கும் இம்மனத்தை முற்றும் ஆண்டவன் கையிற் கொடுத்துவிடு. அவன் அதன்மேல் திருநடமாடி அதன் கொழுப்பை யடக்கிவிடுவான்.

மனிதன் மனோமயன். மனிதன் எப்படி மனோமயனானான்? எல்லையற்ற காலமாக எத்தனையோ தூல, வீரியப்பொருளாக மாறி மாறி இப்போது மனிதனானான்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய்மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்ல சுராராகி முனிவராய்த் தேவராய்"

என்றபடி எத்தனையோ பரிணாமப் படிகளைத் தாண்டித் தாண்டி மனிதனாகிறான். ஒவ்வொன்றினுள்ளும் ஈசுவர சைதன்யமும், கடவுளுணர்வும் சிவசக்தியும் உள்ளன; அஃதின்றி எதற்கும் நிலைப்பில்லை. தனது சக்தியின் மூலம் ஒரு பரம்பொருள் அனைத்துமாக விளங்காவிடில் தோற்றமு மில்லை; மாற்றமு மில்லை. அந்தச் சக்தி கல்லில் உறங்குகிறது; புள்ளில் துளிர்க்கிறது; விலங்கில் ஐயறிவுடன் விளங்குகிறது; மனிதனில் ஆறறிவுற் றொளிர்கிறது. அறிவின் விளக்கமே அதன் விளக்கப் பெருக்கம். மனிதன் இப்போது மனதின் எல்லையில் வந்துளான்; மனம் பேதபுத்தியுள்ளது; மனக் கண்ணாடியின் மூலம் மனிதன் உலகைக் காணலால், அது வேற்றுமைக் காடாகத் தோன்றுகிறது. மனதிற்கு மேலுள்ளது விஞ்ஞான வுணர்வு. இதுவே அருட்சோதி வள்ளலார் புகன்ற அருட்பெருஞ்சோதித் தனிப் பெருங்கருணை. இதையே அவர் அநுபவித்தார். இவ்வநுபவமே உலகுயிர்களனைத்தையும் ஒன்றுபடுத்தவல்லது; இதுவே ஏருசலேம்; இதன்மீதே கிறிஸ்துநாதர் புகன்ற வானரசுள்ளது. அதை நமது யோகிகள் சச்சிதானந்தம், சதாசிவம், துரிய வளநாடு என்பர். இதிலேயே சோதி நடராசன் எல்லாத் தொழில்களையும் நடத்தி யிலங்குகிறான்; இவ்வரசைப் பெற்றாலே உண்மை யறிவின்பமிலகும். தன்னுள் அதைப் பெற்றால், தன் வாழ்வில் பெறலாம். உலகமனைத்தும் அவ்வூறேறுமென்று பெற்றால் உலகே சோதி வளநாடாகும். இவ்வளநாட்டின் பெருமையைக் கண்டே வள்ளற் பெருமான் வேதவேதாந்தத் திருமறையான தனது அருட் பெருஞ்சோதி யகவலில் பல யோக ரகசியங்கள் இலக விரித்துள்ளார். அதுவே சுத்த நிலையம்; சித்த நிலையம்; சக்தி நிலையம்; சத்திய ஞான நிலையம்; சாவறு நிலையம்; நோவறு நிலையம்.

> "சோதிமலை மேல்வீட்டில் தூய திருவமுதம்
> மேதினிமேல் நானுண்ண வேண்டினேன்- [தெரிய
> ஏகா அனேகா எழிற்பொதுவில் வாழ்ஞான
> தேகா கதவைத் திற."

என்று விக்ஞான கதவைக் கடவுளார்வத்துடன் தட்டித் திறந்து வள்ளலார் அநுபவித்த பந்த சுதந்திர சமரஸ சுகநிலயம் அதுவே! சாதி, சமயம் மேல்வருணம், தோல்வருணம், சாத்திரம், கோத்திரம், நீ, நான், எனும் வேற்றுமை யனைத்துமின்றி எல்லாம் இறைவனே, அவனுக்கே யான் உரிமை, எனக்கு எச்சுதந்திரமுமில்லை,

> "சுதந்திர முனக்கே கொடுத்தனம் உனது
> தூயநல் லுடம்பினிற் புகுந்தேம்!
> இதந்தரும் உளத்தில் இருந்தனம் உனை
> இன்புறக் கலந்தனம் அழியாப் [யே
> பதந்தனில் வாழ்க அருட் பெருஞ்சோதிப்
> பரிசுபெற் றிடுகபொற் சபையுஞ்
> சிதந்தரு சபையும் போற்றுக வென்றாழ்
> தெய்வமே வாழ்கநின் சீரே!"

என்று அடைக்கலமாவ தொன்றே வழி! கடவுட் சக்தியே காக்க வல்லது; இடர் நீக்கவல்லது; இன்பம் ஆக்கவல்லது; தவக்கனல் ஊக்கவல்லது! உலகின் இருளைப் போக்கவல்லது! அதனாலேயே யேசு பெருமான், "கடவுட் பூரணம் பெறுக! வானரசடைக!" என்று அழுந்தக் கூவினார். அந்த யாழொலியை மேனாடு போர்ப் பறையால் மூடிற்று! அமைதி தேடி உலகெலாம் பாரத சக்தியை யடையுங் காலம் வந்துவிட்டது! பாரதசக்தி உலகனைத்தையும் யோக சக்திக் கோயிலாக்கும் பொன் யுகம் புன் முறுவல் காட்டுகிறது! அதுவே நவசக்தி; வாழ்வை யோகமாக்கி, உலகை விண்ணாக்கி, மனிதனை அமரனாக மாற்றும் பொன்னொளிர் விக்ஞான சக்தியே நவ யுக சக்தி, சத்ய யுகசக்தி, அந்தி சக்தி யுதயத்திற்கே உலகின் நள்ளிருள் போர், போட்டி, வேற்றுமை யிடர்களுக்குத் தள்ளாடிச் செல்கிறது! அந்தச் சக்தி யுதயமாவது உறுதி; யோகியருளத்தில் அது உதித்துவிட்டது! உலகமென்பது யோகக் காட்சியே (The turn of existence is the Vision of the Seers) புலவர் காட்சியே புவி வாழ்வாகும்! ஆகலின் எழுமின், அறிமின், உழைமின், தழைமின்!

# நாட்டில் வழங்கும் பழங் கதைகள்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை - திரு. சோமசுந்தர தேசிகர்]

ஒவ்வொரு நாட்டிலும் சிறுவர் சிறுமியர் பொருட்டு நயமும் பயமும் நன்னெறியு முடைய பல கதைகள் வழங்குகின்றன. பொதுத் தன்மையுடைய ஒரே செய்தி பலவிதமாகப் பல நாடுகளிலும் வழங்கி வருகின்றது. ஐரோப்பிய நாடுகளில் அவற்றைச் சேர்த்துப் புத்தக உருவில் வெளியிட்டிருக்கின்றனர்.

நம் நாட்டில் அப்படிப்பட்ட சிறுவர் கதைகள் பல உண்டாயினும், அவை அச்சு வாகன மேறியதாகத் தெரியவில்லை. காலஞ்சென்ற பண்டித நடேச சாஸ்திரிகள் தெக்கணத்துப் பூர்வகால கதைகள் என்றொரு புத்தகம் வெளியிட்டிருப்ப துண்மையே யாயினும் அப்புத்தகம் எவரும் எளிதிற் கண்டு பெற்றுப் படிக்கத்தக்க நிலையிலில்லை.

இக் கதைக ளெல்லாம் நாட்டிலே நீண்ட நாளாக வழங்கினும் அவை எவ்வாறுண்டாயின வென அறிதற்கியலு நிலை கிட்டவில்லை. வடநாட்டில் புத்த மதத்தினருள்ளே புத்தரெடுத்த பல பிறவிகளைக் கூறும் புத்த ஜாதகக் கதைகள் என ஒரு கதைத்தொகுதி வழங்குகின்றது. அக்கதைகளுள் சில இந்நாட்டில் வழங்குங் கதைகளோடு ஒருவாறு ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை யீண்டு வரைகிறேன்.

முதலில் ஜாதகக் கதைகளைக் குறித்துப் பின்னர் நாட்டுக் கதையை எழுதுவேன்.

### சீகால ஜாதகம்

காசியிலே பிரமதத்த னென்றொரு அரசன் அரசாண்டுகொண்டிருந்தான். அவன் அரசாளுகையில் போதி சத்துவர் சிங்கவுருவுடன் இமயமலைச்சாரலில் வாழ்ந்துவந்தார். அவரோடு பல ஆண் சிங்கங்களும் ஒரு பெண் சிங்கமும் பிறந்தன. இவைகளிருந்தவிடத்திலே ஒரு நரி, கண்ணாடிக் குகையிலே வாழ்ந்துவந்தது. நாளடைவில் தாய்ச் சிங்கமும் ஆண் சிங்கமும் இறந்து பட்டன. மற்றைய இளஞ்சிங்கங்கள் தம் தங்கையைக் குகையில் வைத்துவிட்டு இரை தேடச் செல்வது வழக்கம். கிடைத்த இரையில் சகோதரச் சிங்கங்க ளெல்லாம் ஒரு பகுதியை மிகுத்துத் தம் தங்கைக்குக்கொண்டுவந்து கொடுக்கும். அவ்வாறிருக்குநாளில் ஒருநாள் கண்ணாடிக் குகையில் வசித்த நரி இளம்பெண் சிங்கத்தைக் கண்டு அதனழகில் ஈடுபட்டது. நுழைவாயிலில் நின்றுகொண்டு தன்னுடைய பிரதாபங்களை யெல்லாம் எடுத்துக்கூறித் தனக்கு மனைவியாகித் தன்னுடன் வாழும்படி வேண்டிற்று. சிங்கக்குட்டியோ நரியை அற்பப்பிராணியென்று நினைந்து அலட்சியமாயிருந்ததாலும், அதற்குண்டான கோபம் மாத்திரம் அடங்கவில்லை. நரி,பெண் சிங்கத்திலின்று விடையொன்றும் கிடைக்காததால் தன் குகைக்குத் திரும்பிவிட்டது. பெண் சிங்கம் தன் சகோதரர்கள் வந்தவுடன் தன் வருத்தத்தைத் தெரிவித்து முறையிட்டது. முதலில் வந்து கேட்ட எல்லோருக்கும் இளமையான கடைக்குட்டிச் சிங்கம் இச்செய்தியைக் கேட்டவுடன், நரியிருக்கு மிடத்தைக் காட்டச் சொல்லி, அங்குச் சென்று நரியைக் கண்டு, கோபங்கொண்டு ஆகாயத்திற் கிளம்பி, நரியின்மேற் பாய்ந்தது. பாய்ந்த அது, கண்ணாடியில் விழுந்து கிழிபட்டு உயிர் துறந்தது. இம் மாதிரியாகச் சிங்கமாகப் பிறந்த போதி சத்துவர் நீங்க, மற்றைய குட்டிகளெல்லாம் இறந்தன. இவர் வந்தபின்னர் நிகழ்ந்த செய்தியைக் கேட்டு, அவசரக் காரனுக்குப் புத்தி மட்டென்றெண்ணி, ஆய்ந்தோய்ந்து பாராத காரியம் பாழாக முடியுமென்று கூறி, நரியிருக்குமிடத்தைச் சென்று சுற்றிப் பார்த்தார். நரி கண்ணாடிக்குள்ளிருப்பதைக் கண்டு, அதன் வாயிலிற் போய்



நின்று கர்ச்சித்தது. இந்தப் பேரொலியைக் கேட்டு நரி இறந்தது. இதனால் எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விடக்கூடாது என்று அறிகிறோம்.

### நம் நாட்டில் வழங்குங் கதை

ஓர் ஊரிலே ஆறுபேர் அண்ணன் தம்பி வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கொரு அருக்காணித் தங்கையிருந்தாள். அவர்களுடைய இளமையிலேயே பெற்றோர் இறந்துவிட்டனர். அப்பெண்ணை அவ்வாறுபேரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அவ்வூர்க்குப் பக்கத்தில் ஒரு பெரிய காடிருந்தது. அதனிலொரு புலி வாழ்ந்து வந்தது. ஒருநாள் அது கல்யாணம் பண்ணிக்கொண்டு வாழவேண்டுமென்ற விருப்பங் கொண்டது. அது காட்டை யடுத்த ஊருக்குள் நுழைந்து பார்த்தது. இந்தச் சகோதரர் அறுவரின் தங்கை அழகாக விருந்தபடியால் அவளைத் தூக்கிக்கொண்டு காட்டிற்குள் போய்விட்டது. அங்குச்சென்று ஓரிடத்தில் இந்தப் பெண்ணை வைத்துவிட்டுத் தான்போய் ஆகாரம் கொண்டு வந்து கொடுக்கும். இவ்வாறு பலநாள் சென்றன. அப்பெண் சில புலிக் குட்டிகளையும் பெற்றாள்.

தமது அருக்காணித் தங்கையை இழந்தபின் சகோதரர் வருந்துவாராயினர். ஐந்து தமயன்மாரும் தங்கையைத்தேடித் திருப்பிக்கொண்டுவர அஞ்சினராயினும் எல்லோரினும் இளையவன் தான்தைரியமாகச்சென்று தங்கையை அழைத்து வருவதாகவும் சகோதரர் ஐவரும் தன் சொற்படி கேட்கும்படியும் வேண்டிக்கொண்டான். அவர்களும் அவ்வாறே ஒப்புக் கொண்டனர். அவர்கள் புறப்பட்டுச் செல்லுகையில வழியில் ஒரு கழுதையைக் கண்டனர். அதனையும் உடன் ஓட்டிச்சென்றனர். அவ்வாறே வழியிற்கண்ட எறும்பு, வண்ணான்சால், பனைமரத்துண்டு இவைகளையு மெடுத்துச்சென்றனர். இவைகளை யெடுத்துக்கொண்டு காட்டில் இரண்டுநாள் அலைந்து திரிந்து தன் தங்கை யிருக்குமிடத்தைக் கண்டுபிடித்தனர். அப்பொழுது புலி ஆகாரத்தின் பொருட்டு வெளியே போயிருந்தது.

தன் அண்ணன்மாரைக்கண்ட தங்கை தமயன்மாருக்குவெகுவிரைவில்விருந்து செய்தாள். பின்னர் புலிவந்தால் அடித்துக்கொன்றுவிடு மென்று பயந்து அனைவரையும்வீட்டிலிருந்த பரண்மேலேற்றி விட்டாள். அவர்கள் தாங்கள் ஓட்டிவந்த கழுதை முதலானவற்றோடு பரணிலிருந்தனர். புலியும்திரும்பிற்று. வரும்போதே "ஆண்காற் றடிக்கிறது; பெண்காற் றடிக்கிறது; ஆடி கதவைத்திற" என்றது. பெண் கதவைத் திறந்து 'ஆணுமில்லை, பெண்ணுமில்லை; நீ சாப்பிடு' என்று உணவிட்டாள். அது உண்டுகொண் டிருக்கும் போது இளையவன் பரணில் ஆரவாரஞ் செய்தான். "அது என்ன குரல்" என்று புலிகேட்கப்பெண், குரலிடுவது வீட்டுத் தெய்வமென்றும் வெகுநாளாக வீட்டுத் தெய்வத்துக்குப் படைக்காததால் அது குரலிடுகிறதென்றும் கூறினாள். புலி அவ்வாறானால் வீட்டுத் தெய்வத்தின் காலைக் காட்டும்படி கேட்டது. உடனே சிறுவன் தைரியமாகப் பனைமரத்தைத் தூக்கிக் காட்டினான். பின்னர் வயிற்றைக் காட்டும்படி வேண்டிற்று. வண்ணான்சாலைத்தூக்கிக் காட்டினான். குரலைக் காட்டும்படி கேட்டது. கழுதையின்காதில்கட்டெறும்பை விட்டான். கழுதை நெடுங்குர லிட்டது. அதனைக் கேட்ட புலி பயந்தோடிவிட்டது. பின்னர் சகோதரர் அறுவரும் கீழிறங்கித் தன் தங்கையை அழைத்துக்கொண்டு ஊர் திரும்பினர்.

# மெய்யின்பத் துறைகள்

[ஜேம்ஸ் ஆலன் (James Allen) என்னும் பேரறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய "By ways of Blessedness" என்ற நூலின் மொழிபெயர்ப்பு.]

(தொடர்ச்சி)

உண்மையான புத்தியுள்ள நல்ல மனிதன் எல்லோரிடத்திலும் நன்மையையே காணுவான்; தீமையைக் காணமாட்டான். மற்றவர்களைத் தன் போல் நினைக்கவும் செய்யவும் விரும்பும் மூடத்தனத்தை அவன் விட்டுவிட்டான். ஏனெனில் மனிதர்கள் வெவ்வேறாக உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தங்கள் பாரமார்த்திகப் பரிணமத்தில் பலவேறு இடங்களில் இருக்கிறார்கள் என்றும், ஆகவே கட்டாயமாய் விதம் விதமாக நினைப்பார்கள் என்றும் செய்வார்கள் என்றும் அவனுக்குத் தோன்றும். வெறுப்பு, நிந்தனை, அகங்காரம், முன் அபிப்பிராயப்படல் ஆகிய இவைகளைத் தள்ளிவைத்துவிட்டதால் அவன் அறிவுள்ளவனாகிறான்; அதனால் தூய்மை, அன்பு, தயை, சாந்தம், பொறுமை, அடக்கம், சுயநலமின்மை உண்டாகி அவன் ஒளியையும் அறிவையும் வெளிப்படுத்தும் என்று அறிவான்; அதுபோலவே பரிசுத்தமின்மை, வெறுப்பு, கொடுமை, காமம், கோபம், கர்வம், சுயநலம் என்பவை இருட்டு, அறியாமையின் தோற்றங்கள் என்பதையும் அறிவான். ஆகவே, இருட்டில் அல்லது வெளிச்சத்தில் இருந்தாலும் மனிதர்கள் ஒரே மாதிரிதான் தங்களுக்கு அவசியமாகத் தோன்றுவதையே செய்கிறார்கள் என்றும், தங்கள் அளவுக்குத் தக்கபடி இருட்டு அல்லது வெளிச்சத்தின் பிரகாரம் நடக்கிறார்கள் என்பதையும் அறிவான். ஞானி அறிகிறான்; அறிவதால் அதிருப்தி, தூஷணைகளினின்றும் நீங்குகிறான்.

ஒவ்வொருவனும் தன் இயற்கைக்குத் தக்கபடியும், சரி தவறு என்று தனக்குத் தோன்றுகிற படியும் நடந்து தன் அனுபவத்தின் பலன்களை உண்மையாகவே அடைகிறான். ஒவ்வொருவனும் தன் இஷ்டப்படியே நினைக்கவும் செய்யவும் சுதந்திரம் பெற்றிருக்கிறான். அவன் மற்றவர்கள் சுகத்தை நினைக்காமல் தன் சொந்த சுகத்தையே தன் சுயநலப்படியே நினைத்தாலும், நடந்தாலும் காரணகாரிய ஒழுக்க நீதியின்படி தான் யோசித்து நடக்கும்படி செய்யும் அல்லல்களை அவன் சீக்கிரம் அடையநேரிடும்; ஆகவே, வேறு மேலான வழியுண்டா என்று பார்ப்பான். அனுபவம்போல சரியான உபாத்யாயர் இல்லை. மனிதர்கள் தவறுகளே தம்மேல் தாமாக விதித்துக் கொள்ளும் நன்மைகளைப்போல திருத்தக் கூடியதும் தூய்மை செய்யக் கூடியதுமானது வேறொன்றில்லை. சுயநலம் உள்ளவன் முட்டாள் தனம் உள்ளவன். அவனே தன் வழியைத் தேர்ந்தெடுக்கிறான்; ஆனால் கஷ்டத்திற்கு அது கொண்டு போய் விடுகிறது; பிறகு அக் கஷ்டத்திலிருந்து அறிவுக்கும் ஆனந்தத்திற்கும் கொண்டு போகும். நல்ல மனிதன் புத்தியுள்ளவனே. அவனும் தன் வழியைத் தேர்ந்தெடுக்கிறான்; ஆனால் அறியாமை வருத்தம் ஆகிய நிலைகளைக் கடந்து அறிவு ஆனந்தம் அடைந்தவன் ஆதலால், அறிவின் பூரண ஒளியில் தன்மதியைத் தேர்ந்தெடுக்கிறான்.

ஒரு மனிதன் மற்றவர்களைக் குறித்துத் தான் தீர்மானிப்பதை விழையாமல் அவர்களைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள எண்ணப்படி பார்த்து அவர்கள் செய்கைகளைப் பற்றித் தன் அளவுக்குத் தக்கபடி பாராமல் அவர்கள் அளவின்படி தீர்மானம் செய்தால் கெடுதியில்லாமையைப் பார்ப்பது இன்னதென்று அறிவான். நன்மை தீமையைக் குறித்து மனிதர்கள் தமக்கிஷ்டமான அளவை ஏற்படுத்தி அதற்குத் தக்கபடி எல்லோரும் வரவேண்டும் என்று கவலைப் படுவதால் தான் ஒருவர்க்கொருவர் கெடுதியைப் பயக்கிறார்கள். ஒரு மனிதனை நம் அளவைப்படி தீர்மானிக்காமல் அவன் அளவைப்படி தீர்மானித்து அதற்குத் தக்கபடி அவனை நடத்துவதுதான் சரியான முறை. அது தீர்மானம் அல்ல, அன்பு முறை. அருவமான அன்பு மூலமாய் நாம் பார்த்தால்தான் நாம் அறிவுள்ளவர்கள் ஆகிறோம்; அவர்கள் உண்மையில் உள்ளபடி அவர்களைப் பார்க்கமுடியும். "மற்றவனைப் பற்றி தீர்மானிக்க நான் யார்" என்று தன் மனதில் ஒருவன் சொல்லக்கூடுமானால், அப்போதுதான் அவன் அன்பை அடைந்தவனாகிறான். நான் மற்றவர்கள் கெட்டவர்கள் என்று தீர்மானிக்கத் தக்க தூய்மையுடையவனா பாவம் இன்மை யுடையவனா? நான் என்னைத் தாழ்த்திக் கொண்டு என் தவறுதலைத் திருத்திக் கொண்டு தான் மற்றவர்கள் நடத்தையைப் பற்றித் தீர்மானிப்பேன் என்று சொல்லக் கூடிய நிலையை ஒருவன் அடைய வேண்டும்.

ஓர் அதிக கெட்டபாவத்தைச் செய்யும்போது பிடிக்கப்பட்ட ஸ்திரீயை மற்றவர்கள் கல்லால் அடிக்கப் போன போது "பாவம் செய்யாதவன் முதல் கல்லைப் போடவேண்டும்" என்று ஒருவர் சொன்னதாகவும், அவர் பாவமற்றவராயிருந்தும் அவர் கல் எடுக்கவில்லை என்றும் அவர் அவளைப்பற்றித் தீர்ப்புக் கொடுக்கவில்லை என்றும் அவளை அதிக சாந்தத்துடனும் பச்சாதாபத்துடனும் பார்த்து "நானும் உன்னைக் கண்டிக்கவில்லை நீபோ, இனி பாவம்செய்யாதே" என்று சொன்னதாகவும் சரித்திரவாயிலாய் அறிகிறோம்.

ஒரு பரிசுத்த உள்ளத்தில் மற்றவர் நடத்தையைப்பற்றிய தீர்மானங்களும் வெறுப்புகளும் இரா. ஏனெனில் அதில் பட்சமும் அன்புமே ததும்பி நிற்கும். அது கெடுதியை நோக்காது, மற்றவர்கள் பால் உள்ள கெடுதியை நோக்காமலிருக்க ஒருவன் சக்திபெற்றால் அன்றி



பாவம், வருத்தம், துன்பங்களினின்று அவன் விடுதலையடைய முடியாது.

ஞானம் அடைபவன் தான் தன்னிடத்திலாவது தன் செய்கைகளிலாவது கெடுதியைப் பார்க்க முடியும். அப்போது அவன் தனக்கு தப்பு என்று தோன்றிய செய்கைகளை விட்டுவிடுகிறான். தான் செய்ததைச் சரி என்றே ஒவ்வொருவனும் சொல்லுவான். மற்றவர்கள் தன் நடத்தையை எவ்வளவு கெடுதியாக நினைத்தாலும் தான் அது நல்லதென்றும் அவசியமென்றுமே நினைக்கிறான்! அல்லாவிட்டால் அவன் அதைச் செய்ய முடியாது. ஒரு கோபமுள்ளவன் தன் கோபத்தைச் சரி என்றே நினைக்கிறான். லோபியும் அவ்வாறே தன் லோபத்தைப் பற்றி நினைக்கிறான். காமியும் தன் காமத்தைப் பற்றி அவ்வாறே கருதுகிறான். பொய்யன் தன் பொய் அவசியம் என்று நினைக்கிறான். தான் வெறுக்கிற நபர்களைப் பற்றிப் புறங் கூறுபவனும் அவர்கள் கெட்ட சுபாவத்தைப்பற்றி மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் போது தான் செய்வது சரி என்றே நினைக்கிறான். ஏராளமான செல்வம், சௌக்கியம், சுகம் அடைய சரியான வழியும் [illegible] வழியும் திருடுவதுதான் என்று திருடன் நினைக்கிறான். கொலைஞனும் தன் செய்கைக்குச் சரியான காரணம் இருக்கிறதென்றே நினைக்கிறான்.

ஒவ்வொருவன் செய்கைகளும் தன் ஒளி அல்லது இருள் அளவுக்குத் தக்கபடி இருக்கின்றன. எவனும் தான் இருப்பதற்கு மேலாகவாவது, தன் அறிவுக்கு மீறியாவது நடக்க முடியாது. ஆனால் அவன் தன்னை விருத்தி செய்து கொள்ள முடியும்; அதன் மேல் தன் ஒளியை அதிகரிக்கச் செய்து தன் அறிவை விசாலப்படுத்தக்கூடும். கேலி செய்வதும் திட்டுவதும் ஒரு கோபமுள்ளவன் கையாள்வது அவன் பொறுமையும் மன்னிப்புத் தன்மையும் காட்டும் அளவுக்கு அவன் அறிவு இல்லாமையாலே, சாந்தத்திற் பழகாததனால்,

அவன் அதை அறிகிறதில்லை ; அதைத் தேர்ந் தெடுக்கிறதில்லை. சாந்தத்தின் ஒளியொடு கோபத்தின் இருளை ஒத்துப் பார்க்கும் அறிவு அவனுக்கு இல்லை. பொய்யன், புறங்கூறுபவன், திருடன் விஷயத்திலும் அப்படியே. தன் முதிராத அறிவு அநுபவம் கொண்டு மனதிலும் செய்கையிலும் இருட்டான நிலைமையிலேயே இருக்கிறான் ; ஏனெனில் மேலான நிலைமைகளில் பழகாததால், அவைகளின் அறிவு அவனுக்கில்லை; அவைகள் அவன் வரைக்கும் இல்லாமைபோலவே. "இருட்டில் ஒளி பிரகாசிக்கிறது ; ஆனால் இருட்டுக்கு அதை அறியும் சக்தி இல்லை." தான் வசிக்கிற சந்தர்ப்பங்களையும் அவன் அறிய மாட்டான் ; ஏனெனில் அவை இருட்டா யிருப்பதால் அவைகளுக்கு அறிவு என்பதே இல்லை.—"நோன்பி"

# இ டி யே று

## நோன்பின் நோக்கம்

மகாத்மா காந்தி ஏர்வாடா சிறைக் கோட்டத்தில் உண்ணா நோன்பிருந்தது உலகறிந்த தொன்று. அதன் நோக்கம் என்னை? அந் நோக்கத்தை இருகூறுபடுத்திக்கொள்ளலாம். ஒன்று புறநோக்கம் ; மற்றொன்று அகநோக்கம். புறநோக்கம் முதன் மந்திரி மக்டானல்ட் பிறப்பித்த அறிக்கையிலுள்ள தாழ்த்தப்பட்டோர்க்குத் தனித் தொகுதி என்னும் பகுதியில் மாறுதல் ஏற்படவேண்டு மென்பது. அகநோக்கம் தீண்டாமை தொலைதல் வேண்டுமென்பது. காந்தியடிகள் நோன்பிருந்தவேளையில் பண்டித மாளவியர் உள்ளிட்ட சில அன்பர்கள் முயற்சியால் புறநோக்கம் ஒருவாறு முற்றுப்பெற்றது. முதன் மந்திரி பூனா உடன்படிக்கைக்கு இசைந்து நடக்க ஒருப்பட்டனர். இனி அகநோக்கம் நிறைவேறுதல் வேண்டும். இன்னும் ஆறு திங்களில் தீண்டாமை தொலைதல்வேண்டு மென்றும், இல்லையேல் தாம் மீண்டும் நோன்பு துவங்க நேருமென்றும் அடிகள் அருளி யுள்ளார். ஆறு திங்களில் தீண்டாமை தொலைய நாட்டவர் முயலுதல் வேண்டும். நிலைமை எவ்வாறிருக்கிறது!

வடஇந்தியாவில் நல்வழியில் முயற்சி துவங்கப்பட்டிருக்கிறது. வடஇந்தியா காந்தியடிகள் வழியைப் பற்றிக் கடனாற்றுமென்று துணிந்து கூறலாம். நமது 'அரிய' தென்னிந்தியாவைப்பற்றிக் கவலை புறவேண்டியதாயிருக்கிறது. தீண்டாமை தொலைவுக்கென இங்கே இன்னும் எவ்வகை முயற்சியுங் கருக்கொள்ளவில்லை. பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளிவரும் அளவில் தென்னிந்தியரிற் சிலர் முயன்று வருகிறார். இவ்வேளையில் எதிர்ப்புகள் நாலுபக்கங்களிலும் புற்றீசல்போல் புறப்பட்ட வண்ணமா யிருக்கின்றன. தென்னிந்திய வைதிகர்கள் தங்கள் பழஞ் சுவடிகளைத் தாங்கிக் கிளம்பிவிட்டார்கள். எங்கணும் அவர்கள் கூட்டம்! எங்கணும் அவர்கள் பேச்சு ! எங்கணும் அவர்கள் சாத்திர முழக்கம்! ஆகவே தென்னிந்தியா தீண்டாமையை எளிதில் தொலைக்க விரும்பாது என்று தெரிகிறது. இதற்கென் செய்வது?

முதலாவது சீர்திருத்தக்காரர்கள் அனைவரும் ஒருமைப்படுதல் வேண்டும். அவர்கள் தம் முயற்சிகள் பலவாறு சிதைந்துபோதல் கூடாது. தீண்டாமையை ஒழிப்பதில் எல்லா அரசியல் கட்சியிலுள்ள சீர்திருத்தக் காரர்களெல்லாம் ஒன்று சேர்ந்து உழைக்க உளங்கொள்ளல் வேண்டும். இதில் தத்தம் அரசியல் கட்சி வேற்றுமைகளைப் பாராட்டுவது தேச நலத்தை நாடுவதாகாது.

தீண்டாமை விலக்குக்கெனப் பல சங்கங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.





ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒவ்வொருவித பெயர் அமைக்கப்படுகிறது. அததற்குத் தனித்தனி நிர்வாக சபை அமைக்கப்படுகிறது. அச்சங்கங்களின் நோக்கம் ஒன்றாயிருந்தாலும் வேலைத் திட்டத்திலும் பிறமுறைப்பாடுகளிலும் அவைகளிடைக் கருத்து வேற்றுமை தோன்றா நிற்கும். இக்கருத்து வேற்றுமைப்போரே பெரும் போராக நிகழ்ந்து கொண்டிருக்கும். இப்போரிடைத் தீண்டாமை தீண்டாமையாகவே கிடக்கும்.

தீண்டாமை விலக்குப் பிரசாரம் என்னும் பெயரால் தத்தம் தேர்தலுக்கு ஆக்கந்தேடச் சிலர் முயல்கிறார். எவ்வேடந் தாங்கியாதல் தேர்தலில்வெற்றி பெற வேண்டு மென்பது அவர்தங் கருத்து. அந்நேயர்கள் செல்வாக்குப் பெற்றுவரும் எவ் வியக்கத்திலுஞ் சேரத் தயங்குவதில்லை. அவர்கள் கூட்டுறவுபெறும் இயக்கம் எதுவும் வெற்றி பெறுவதில்லை.

தென்னிந்தியாவில்தீண்டாமை விலக்குச் சங்கமென ஒன்றே யிருத்தல் வேண்டும். அதில் சேர்வோர் அவ்வொரு நோக் குடையரா யிருப்பது சிறப்பு. வேறு கருத் துடையவர்களும் அச் சங்கத்தில் சேரலாம். சேர்ந்து அவர்கள் தங்கள் கட்சி வழியில் அச் சங்கத்தை ஈர்க்க முயலா திருத்தல் நலம்.

தென்னிந்தியாவி லுள்ள சீர்திருத்தக்காரர்களெல்லாம் ஒன்றுபட்டு ஒரு சிறந்த திட்டம் வகுத்துத் தொண்டாற்ற முயல்வார்களாக. பிரிந்துபிரிந்து தொண்டாற்றுவதால் பயன்விளையாது. எல்லாரும் ஒன்றி முயன்றால் காந்தியடிகள் கொண்ட உண்ணா நோன்பின் அகநோக்கம் நிறைவேறுவதாகும். இல்லையேல் காந்தியடிகள் மீண்டு மொரு முறை நோன்பிருக்க நேரும். அந்நிலை நேராதவாறு காப்பது தென்னிந்தியர் கடமை.

வகுப்பு ஒற்றுமைக்கெனக் காந்தியடிகளை அடிக்கடி உண்ணா நோன்பு கொள்ளுமாறு தேசத்தார் செய்வது அழகன்று. முதல் மந்திரியின் அறிக்கை பிறப்பதற்கு முன்னரே தாழ்த்தப்பட்டோரிடை ஒருவித ஒற்றுமை காணத் தேசபக்தர்கள் முயன்றிருத்தல் வேண்டும். காந்தியடிகள் உண்ணா நோன்பில் இறங்கிய பின்னைத் தாழ்த்தப்பட்டோர் தனித் தொகுதியில் ஒருவித மாறுதல் ஏற்படலாயிற்று. அடிகளின் நோன்பால் ஒற்றுமை !காண நேர்ந்தமை போற்றக்கூடியதாயிற்று. அது போக. இப்பொழுது தீண்டாமை விலக்குத் திட்டம் நம் முன்னே நிற்கிறது. ஆறு திங்களில் அத்திட்டத்தை நிறைவேற்றப் பொதுவாகத் தேசத்தாரும் சிறப்பாக ஹிந்துக்களும் முயலக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடிகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தீண்டாமை தொலையாதிருப்பின், அவர் உண்ணா நோன்பில் உளங்கொள்வது உறுதி. அடிகள் மீண்டும் தீண்டாமையின் பொருட்டு உண்ணா நோன்பிருக்கும் ஒரு நிலையைச் சாதி ஹிந்துக்கள் உண்டுபண்ணுவார்களே யானால், அவர்கட்குச் சுயராஜ்ய வேட்கையில்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நனி விளங்கிவிடும். இத்துணை நாள் சுயராஜ்யக் கூச்சலிட்டு அதற்குரிய சமயம் நேரும்போது அதற்கு மாறுபட்டு நிற்றல் அறமாகாது.

தீண்டாமை விலக்கில் சிறந்த சுயராஜ்யப் பேறு இருத்தலை நன்குணர்ந்தே காந்தியடிகள் தீண்டாமை விலக்கலில் இப்பொழுது தனி நாட்டஞ் செலுத்தியிருக்கிறார். இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் வேண்டுவதில்லை. பூனா உடன்படிக்கை ஒன்றே சாலும். காந்தியடிகளின் உண்ணா நோன்பின் பயனாகப் பூனா உடன்படிக்கை நிறைவேறிற்று. அதன் அடிப்படையில் பலதிறத் தத்துவங்களிருக்கின்றன. சாதி ஹிந்துக்கட்கும் தாழ்த்தப்பட்டவர்க்கு மிருந்த பிணக்கு ஓரளவில் தீர்ந்தமை சிறப்பாகக் குறிக்கத்தக்கது. அதனால் வேறு பல நலன்கள் விளையுங் குறிகளுந் தோன்றி யிருக்கின்றன. மௌலானா ஷாக்குத்தாலி பூனா உடன்படிக்கை பிறந்த நாள் தொட்டுத் தனித் தொகுதிப்

பற்றை மாற்றத் துவங்கி, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை காண முயன்று வருதல் கண்கூடு. ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை, சீக்கிய - கிறிஸ்துவர்களையும் ஒற்றுமையுறச்செய்யும். இவ்வளவு நலன்களும் பூனா உடன்படிக்கையினின்றும் பிறந்தன என்பதைச் சாதி ஹிந்துக்கள் கவனித்து நடப்பார்களாக.

பூனா உடன்படிக்கை இவ்வளவு நலன்களை விளைத்து வருகிறதெனில், முழுத் தீண்டாமைவிலக்கு எவ்வளவுநலன்களை விளைக்கும் என்பதை விளக்கவும்வேண்டுமோ ? தீண்டாமை விலக்கு, சுயராஜ்யத்துக்கு இன்றியமையாத வகுப்பு ஒற்றுமை, சகோதர நேயம், சுதேசிய வேட்கை முதலியவற்றைப் பெருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இத்துணை நலன்களை நாட்டுக்கு விளைக்கவல்ல தீண்டாமையை விலக்க வெறுப்பதும், அதனை இருக்குமாறு செய்ய முயல்வதும் தேசபக்தி யாகுமா என்பதை வைதிகர்கள் உன்னுவார்களாக.

வைதிக நண்பர்கள் காலதேசவர்த்தமான நிலைமையைக் கூர்ந்து சிந்தித்துத் தீண்டாமை விலக்குக்கு ஆதரவு தேடுவது சிறப்பு. அது ஹிந்துமதப் பக்தியுமாகும். இந்நேரத்தில் வைதிகர்களிற் பலர் எதிர்ப் பிரசாரஞ் செய்யப்புகுந்திருப்பது சுயராஜ்ய முயற்சிக்குக் கேடு சூழ்வதாக முடியும், வைதிகர் எதிர்ப்பிரசாரம், காங்கிரஸின் நீண்ட கால சேவை, தேசபக்தர்களின் அரிய தியாகம் முதலியவற்றை நிர்மூலப்படுத்துவதாகும். தீண்டாமைக்கு எதிர்ப்பிரசாரம் நாட்டில் நடைபெறுகிறது என்னுஞ் செய்தி இந்நாளில் உலகிடைப் பரவுவது இந்தியாவின் மதிப்பைக் குறைத்துவிடும். "தீண்டாமை பாராட்டும் ஒரு நாட்டுக்கா சுயராஜ்யம்" என்று எளிதில் சர்ச்சில் கூட்டத்தார் பேசித் தங்கட்சிக்கு ஆக்கந்தேடுவர். பொதுவாக உலக அநுதாபத்தையே இந்தியா இழக்க நேரும். ஆகவே எதிர்பிரசாரஞ் செய்யாமலும் செய்விக்காமலு மிருக்குமாறு வைதிகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

"தீண்டாமை வேண்டாம்" என்று காந்தியடிகள் நோன்பிருந்தால், தாம் "தீண்டாமை வேண்டும்" என்று நோன்பிருக்கப் போவதாகக் கும்பகோண வைதிகர்களிற் சிலர் பேசியிருக்கிறார். இஃதென்ன பேச்சு ? இஃதென்ன பிடிவாதம் ? இதுவா ஹிந்து மதம் ? இது பிடிவாத மதமாகும். வைதிகர்கள் போராட்டத்தை விரும்புவது நியாயமன்று.

ஹிந்து மதத்தில் தீண்டாமையுள்ள மட்டும் அது சாத்தான் மதமாகுமேயன்றித் தெய்வமதமாகா தென்பதை நேயர்கள் உணர்வார்களாக.

## "ஜஸ்டிஸ்" கட்சி

ஜஸ்டிஸ்கட்சி தோன்றி ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளாகின்றன. அக்கட்சி வகுப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டே கடனாற்றி வருகிறது. அக்கட்சி பிராமண ரல்லாதார் கட்சி என்று சொல்லப் படுகிறது. பிராமண ரல்லாதார் எல்லாரும் அக்கட்சியில் சேர்ந்தா ரில்லை. வகுப்பு வாதத்தை விரும்பாத பிராமண ரல்லாதார் பலரிருக்கிறார். இவ்விரு சாரார்க்கும் பல திறப் போர்களும் நிகழ்ந்திருக்கின்றன. வகுப்புக் கட்சியால் ஒருமைப்பாடு உண்டாதல் அரிது. அதனால் பிளவும்பிணக்கும் பெருகிக்கொண்டு போகும். இதற்கு வேறு சான்று வேண்டுவ தில்லை. ஜஸ்டிஸ் கட்சியின் பதினைந் தாண்டைய அநுபவமே சிறந்த சான்றாக நிற்கிறது.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய நாள் தொட்டுத் தென்னிந்தியாவில் வகுப்புப் பிணக்கு நாளுக்குநாள் பெருகலாயிற்று என்று எவ்வறிஞரும் கூறுவர். இப்பொழுது நாட்டில் பல விடங்களில் சாதி மகாநாடுகள் கூடிய வண்ணமாயிருக்கின்றன. ஒவ்வொரு சாதியாரும் தத்தம் இனத்தவர்க்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் அவாவித் தீர்மானஞ் செய்கிறார். இதற்கு அடிப்படையான காரணம் ஜஸ்டிஸ் கட்சியில் வகுப்புரிமை நிலவிக்கொண் டிருத்தல் என்று கூறுதல் மிகையாகாது. ஜஸ்டிஸ் கட்சிச் சகோதரர்கள், தங்கள் கட்சியின் நடை முறையைப் பற்றித் தாங்களே ஆய்ந்து ஓய்ந்து பார்ப்பார்களாக. சிலர், அதன் நிலையை ஆய்ந்து ஓய்ந்து பார்த்து அதைத் தேசியக் கட்சியாக்கமுயன்று வருவது போற்றற்குரியது. உலக நிலையும், காலப்போக்கும் அக்கட்சியின் நிலையை நாளடைவில் மாற்று மென்றே நினைக்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியின் நோக்கங்களுள் ஒன்று சாதி வேற்றுமையைத் தொலைக்கவேண்டுமென்பது. அந்நோக்கம்விழுமியது ; பொன்னே போல் போற்றத் தக்கது. ஆனால் அவ்விழுமிய நோக்கத்தைநிறைவேற்றவல்ல அரசியல்திட்டம் ஜஸ்டிஸ் கட்சியில் மலர்வதில்லை. காரணம் அக்கட்சியின் அரசியல், வகுப்பு வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதேயாகும். அரசியலில் வகுப்புரிமையையும், சீர்திருத்தத்தில் சமரசத்தையும் விரும்புவது பொருளற்றதென்று சொல்ல வேண்டுவதில்லை.

அக்கட்சியைத் தோற்றுவித்தவருள் ஒருவராகிய டாக்டர் நாயர் சிறந்த தேசியவாதியாக இருந்தவர். ஏதோ ஒரு காரணம்பற்றி அவர் வகுப்புக் கட்சியைக் காண்பதற்குத் துணை நின்றார். டாக்டர் நாயர் வகுப்புக் கட்சியால் நாட்டிற்கு நலனில்லை என்பதை நன்குணர்ந்தவராதலான், "ஜஸ்டிஸ் கட்சி வகுப்புவாதங் கொண்டு பத்தாண்டு நிலவலாம். அதற்குமேல் அஃது அக் கொள்கையுடன் நிலவுத லாகாது" என்று அடிக்கடி அவர் சொல்லிவந்தார். அப் பத்தாண்டுங் கடந்து மேலே ஐந்தாண்டாகிவிட்டன. இனி வகுப்புக் கட்சியாக ஜஸ்டிஸ் கட்சி நிலவுதல் கூடாது. அது தேசியக்கட்சியாக மாறுதல்வேண்டும்; இல்லையேல் அதுமாய்தல்வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி இனி வகுப்புக் கட்சியாக இருத்தற்கு இடமில்லையென்பதைத் தஞ்சை உணர்த்தி விட்டது. இனிக் கூடப்போகும் ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் வகுப்புவாதம் தொலையு மென்று எதிர் பார்க்கிறோம்.



## ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை

இந்திய சுயராஜ்யத்துக்கு ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை இன்றியமையாததென்று காந்தியடிகள் அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தது நேயர்கட்குத் தெரியும். ஹிந்து-முஸ்லிம்ஒற்றுமை சுயராஜ்யத் தூண்களுள் ஒன்று என்றுங் காந்தியடிகள் கூறுவது வழக்கம். அவ்வொற்றுமை குறித்து அடிகள் உழைத்த உழைப்பு அளவிடற்பாலதன்று. அடிகள் உழைப்பு நல்ல பயனையுந் தந்து வந்தது. நேரு அறிக்கை பிறந்தநாள் தொட்டு ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை படிப்படியாகக் குலையலாயிற்று. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குக் காந்தியடிகள் செய்த முயற்சிகளுக்கெல்லாம் உயிர்த் துணைவர்களாக நின்ற அலிசகோதரர்கள் நெஞ்சிலும் ஒருவகை மாறுதலுண்டாயிற்று.

காந்தியடிகள் 1921-ம் ஆண்டில் துவங்கிய ஒத்துழையாப்போருக்கு ஆக்கந் தேடினவர்கள் அலி சகோதரர்கள் என்பது உலகறிந்ததொன்று. அத்தகை அலி சகோதரர்கள் 1930-ம் ஆண்டில் துவங்கப்பெற்ற போரில் கலந்துகொண்டார்களில்லை. இவர்கள் கலப்பின்மை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின்மைக்கு ஓர் அறிகுறியாகவும் விளங்கிவந்தது. வடஇந்தியாவில் பெரும் பெருங் குழப்பங்களும் நிகழலாயின. கான்பூர், சிட்டகாங், பம்பாய் முதலிய இடங்களில் நடந்த ஹிந்து - முஸ்லிம் குழப்பங்கள் நாட்டைப் பல வழியிலும் அல்லற்படுத்திவிட்டன. இப்பொழுது தெய்வத் திருவருளால் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை மலர்ந்து வருவது குறித்து மகிழ்வெய்துகிறோம். இதற்குப் பெருந்துணை புரிந்துவரும் மௌலானா ஷாக்குத்தலிக்கு நமது வாழ்த்து உரியதாக.

மௌலானா ஷாக்குத்தலி ஒரு பெரிய வீரர். அவர்தந் துணை, காந்தியடிகள் முயற்சிக்கு வேண்டற்பாலது. "ஒற்றுமை இந்தியாவை விரைவிற் காணலாம்" என்று அவர் கூறி வருவது மகிழ்ச்சி யூட்டுகிறது. மௌலானா முயற்சியால் நிகழ்ந்து வரும் ஹிந்து-

முஸ்லிம் ஒற்றுமை, முதன் மந்திரி பிறப்பித்த அறிக்கையில் பெரும் மாறுதல் செய்யும் என்பதில் ஐயமில்லை.

இவ்வேளையில் காந்தியடிகள் சிறைக் கோட்டத்தி லிருத்தலை மௌலானு விரும்பாது, அடிகள் விடுதலை குறித்து முயன்றுவருவதும் பாராட்டத்தக்கது. அடிகளின் விடுதலை அவசியத்தைமௌலானு, இராஜப் பிரதிநிதியினிடம் வலியுறுத்தி யிருக்கிருரென்று அறிகிறேம். இராஜப் பிரதிநிதி ஆழ்ந்த சிந்தையில் இருக்கிருரென்று தெரிகிறது.

" சட்டமறுப் பியக்கத்தை நிறுத்துமாறு காங்கரசைக்கேட்பேன் " என்று மௌலானு ஷாக்குத்தலி கூறியிருப்பதாகச் செய்தி கிடைத் திருக்கிறது. காந்தியடிகளின் விடுதலை சட்டமறுப்பு நிறுத்தத்தைப் பொறுத் திருக்கிறது என்று ஊகித்தல் கூடும். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை குறித்து உழைத்து வரும் மௌலானு விருப்பத்துக்குக் காந்தியடிகள் இணங்குவரென்றேகருதுகிறேம்.

சிறையி னின்றும் வெளிப்போந்துள்ள பெருந் தலைவர்களிற் பலர் மீண்டும் சிறைபுக எண்ணுது தீண்டாமை விலக்கு முதலியவற்றிற் கருத்திருத்தி யிருப்பது கவனிக்கற் பாலது. அவர்கள் மனம் சட்டமறுப்பில் தற்போது படிந்து கிடக்கவில்லை என்பது அவர்களின்நடைமுறையால்தெரிகிறது. காந்தி யடிகளுடன் ஒற்றுமை நாடிய தாழ்த்தப்பட்ட தலைவர்களும் சட்டமறுப்பு நிறுத்தப் படுதல் வேண்டுமென்னுங் கொள்கை யுடையவர்களாகவே இருக்கிருர்கள். சட்டமறுப்புடன் தீண்டாமை விலக்குப் பிரசாரமும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரசாரமும் நடைபெறுதல் அரிது.

ஆகவே மௌலானு வேண்டுகோளுக்குக் காந்தியடிகள் இணங்குவரென்றே நம்புகிறேம். தீண்டாமை விலக்கும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையும் சுயராஜ்யத்துக்குத் தூண்கள் என்பதை நன்கு உணர்ந்த மகாத்மா காந்தி அவைகளின் பொருட்டுச் சட்டமறுப்பை நிறுத்த இணங்குவரென்றே பல விடங்களிற் பேசப்படுகிறது: மௌலானுவும் காந்தியடிகளும் ஒரு நன்முடிவுக்கு வருவார்களென்று நம்புகிறேம். எல்லாம் ஆண்டவன் செயல்.

---


## கா தம் ப ரி

இந்நூல் வடமொழியில் பாணபட்டனுர் என்னும் புலவர் சிகாமணியினுல் செய்யப்பட்டு, தன்னைக் கற்பார்க்கு இன்பமளித்துத் திகழ்வது, வடமொழியாளர் பலர்க்குந் தெரிந்ததே. இந்நூலின் அருமை பெருமைகளை வடமொழி பயின்ருேயன்றிப் பிறரும், சிறப்பாக மாணவரும் உணர்ந்து இன்புற வேண்டி, இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பெற்று வெளி வந்துள்ளது. விலை அணு 12

## தென்னுட்டுப் பெரியோர்

இரண்டாம் பதிப்பு

எஸ். எஸ். அருணகிரிநாதர்

(Tamil Pandit, T. T. V. High School, Madras)

அன்பிற் பெரியாராய்த் திகழ்ந்து புலவர் முதல் பாமரர் ஈருக யாவரும் தெரிந்து போற்றுந் தன்மை வாய்ந்துள்ள தாயுமானவர், குலசேகராழ்வார், பட்டினத்தார், திருமங்கை யாழ்வார் ஆகிய நான்கு பெரியோர் தம் திவ்விய சரிதங்களையும் இந்நூலின் கண் பரக்கக் காணலாகும். இந்நூல் எளிய தமிழ் நடையிலே கற்போர் உள்ளங் கவரும் வண்ணம் அழகுபெற அமைந்துள்ளது. விலை அணு 10

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.





## சென்னை ரிஜிஸ்டிரேஷன்

### இன்ஸ்பெக்டர் - ஜெனரல் எழுதுவதாவது :—

டாக்டர் பண்டிட், இ. எஸ். கோபன் அவர்களது காயசித்தி மகரத்வஜத்தின் பலன்களைப் பரீக்ஷிக்கும் பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. நாடிப் பரீக்ஷையில் பண்டிதருக்குள்ள திறமையையும் நான் கண்டுள்ளேன். அவர் நோய்களைக் கண்டறிவதில் அற்புதமான சாமர்த்தியம் வாய்ந்தவர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவரது காயசித்தி மகரத்வஜம் எனக்கு அதிக அனுகூலமளித்திருக்கிறது. டாக்டரின் ஸ்தாபனம் வைத்தியத் தொழில் சீரும், சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமென்பதே என் கோரிக்கை.

ராவ் பஹதூர் பி. வி. ஸ்ரீ ஹரி ராவ் நாயுடுகாரு.

20-தினங்களுக்கான 40-மாத்திரைகளின் விலை ரூபா. 5.

### உத்தரவாத சிகிச்சை

வெண் குஷ்டம், மதுமேகம், பாரிச வாய்வு, கீல்வாய்வு, குல்மம், காசநோய், மூலவியாதி, ஸ்திரீ சம்பந்த வியாதிகள், குதகவாய்வு, பெரும்பாடு, பெண்மலடு இவைகளுக்கு நிச்சயம் சிகிச்சை செய்யப்படும்.

கீழ்க்கண்ட இடங்களில் நேரில் கன்ஸல்ட் செய்க. அல்லது விவரமாக எழுதுக.

| தலைமை ஆபீஸ் : | பிராஞ்சு : |
|---|---|
| 44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, காலை 8-மணிமுதல் 11-மணி வரை. | 193, மவுண்ட்ரோட், மாலை 3 மணி முதல் 6-மணி வரை. |

### தமிழ்நாடு ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

| தந்தி விலாசம் : | தபால் பெட்டி நெ 278, | டெலிபோன். |
|---|---|---|
| "காயசித்தி" | மதராஸ். | நெ. 3767. |



எல்லா டாணிக்குகளுக்கும்
நம்முடைய
பெரிய தலைவன் யார் ?

## ம த ன ம ஞ் ச ரி

மாத்திரையே

பெரிய தலைவன். இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, இந்திரிய ஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தேகத்தை வஜ்ர சரீரமாக்கி விடுகின்றது. ஒரு டப்பி விலை ரூபா 1.

இனம் ! வைத்தியா விந்தியா இனம்!!

விபரம் வேண்டுவோர்
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

மதனமஞ்சரி பார்மசி,
1/94, சைனுபஜார் ரோட், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோனிராமட் ரோட்,
பிஞங்கு S. S.



## தேகபலம்
## புத்திர சந்தானம்

இவைகளை யடைய எங்கள்
ஆதங்கநிக்ரஹ மாத்திரைகளை
உபயோகியுங்கள்

இம்மாத்திரைகள் சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன; மேலும், தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம் ! இனம் !!

காம சாஸ்திரம்

என்னும் புத்தகம் கேட்போருக்கு இனமாகவும், தபால் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

இதற்கு ஒரு
வட்டமேசை
மகாநாடு
வேண்டுமா
?
ஊரறிந்த
உண்மை
யாயிற்றே!

# ருக்மணி குக்கர்

அடுக்கு

சமையலுக்கு நிகரற்றது.
1, 2, 4, 6, 8, 12, 14 பேர்
களுக்கு ஏழு அளவுகள்
ரூ. 10-8, 14, 18, 23, 29
35, 41. விபரபுத்தகம் இனம்.

இன்றே
எழுதுக.
ருக்மணி
குக்கர்
கம்பெனி,
இராயபுரம், (3)
சென்னை.

## வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷை சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாந் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,

வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

## கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,

நித்தியானந்த வைத்தியசாலை,

பழநி S. I.

## பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் அளிக்கப்பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப்பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை)

பண்டித காழியூர் :

ம. ஸ்ரீநிவாசாச்சாரியார்,

1/34, லஸ் சர்ச் ரோட்,

மயிலாப்பூர், மதராஸ்.

## காரைக்காலம்மையார் திருப்பாடல்கள்

திரு. வி. க. இயற்றிய

அரும்பதவுரையுடன்

விலை அணா 6.

ஆனந்தாதி

ஆனந்த அட்சயாந்த

## 73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதி முதலி தெரு,

இராயப்பேட்டை, சென்னை.





## அரிய தமிழ் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்).... | 3 | 0 |
| முருகவேள் பனுவல் திரட்டு .... .... .... | 1 | 0 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்) .... .... | 0 | 12 |
| முருகன் திருவருட்பா .... .... .... .... | 0 | 8 |
| தேவி தோத்திர மஞ்சரி .... .... .... | 0 | 4 |
| குசேலோபாக்கியாநம் (மூலமும் அரும்பத உரையும்) .... | 1 | 4 |
| விநாயகர் பனுவல் திரட்டு .... .... .... | 0 | 6 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும் | | |
| கிளேஸ் .... .... .... .... | 0 | 5 |
| ஷை ரப் .... .... .... .... | 0 | 3 |
| சிவபுண்ணியத் தெளிவு .... .... .... .... | 0 | 3 |
| காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன் .... .... .... | 0 | 6 |

## அடக்கவிலைப் பதிப்பு நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் ... ... | 0 | 12 |
| சுந்தரர் தேவாரம் ... ... | 0 | 4 |
| திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ... ... | 0 | 10 |
| திருவாசகம் ... ... ... | 0 | 2½ |
| தாயுமானார் பாடல் ... ... | 0 | 4 |
| திரு அருட்பா—(பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு) 5-வது திருமுகப் பகுதி ... ... | 0 | 6 |

## கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து

சிவத்தியானானந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவர வில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயின்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரண்ய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5, மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

# மின்சார ரசம்

மனிதர் தலைமுதல் கால்வரை வரும் சகல
வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென
உலகமெல்லாம் புகழ்பெற்றது

உள்ளுக்கும் மேலுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்து
நிமிஷக் கணக்கில் குணம் பெறலாம்.

மின்சார ரசத்தினால் தீராத வியாதிகளே இல்லையென்பது
பல்லாயிரக்கணக்கான ஜனங்களின் அநுபவம்

உண்மை அறிய ஒரேமுறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும் :—

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு. கேட்லாக் இனாம்.

விலாசம் ; மின்சார ரசம் கம்பெனி (லிட்.) சேலம்.

**விஜய ரக்ஷித கவசம்**

நீங்கள் கவலையற்று அச்சமின்றி வாழ விரும்பினால்—, கீர்த்தியுடனும் தன சம்பத்துடனும் புத்திர சந்தானத்துடனும் ஆரோக்கிய திட சரீரத்துடனும் இருக்க எண்ணினால் நமது கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். இது, நியாயமான எக்காரியத்திலும் வெற்றியையும், தொழிலில் மேன்மையையும், குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையையும் வேறு பல நன்மைகளையும் உண்டுபண்ணும்.

வெள்ளிக் கவசம் ரூபா 5. தங்கக் கவசம் ரூபா 15.

விலாசம் :—பிரபசர் - கா. கோவிந்தாச்சார்,
1/34, லஸ் சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.


# பெரிய புராணம்

## மூலமும்
## அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்
## வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகிறது

**ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !**

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறும் பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பு, டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.

**சந்தா விவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை | ,, | 4 | 0 | 0 |
| வெளியூர்—தபாற் செலவுடன் | ,, | 4 | 8 | 0 |

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

---

குறிப்பு :—புத்தகம் முழுவதற்கும் 1932-ம் ௵ ஆகஸ்டு௴ இறுதிக்குள் சென்னை வாசிகள் ரூபா 3½-ம் வெளியூரார் ரூபா 4-ம் முன் பணம் செலுத்த வேண்டுமென முன்னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ; அந்தக் காலம் கடந்துவிட்டமையான், இப்பொழுது முன்பணக் கட்டணம், சென்னைக்கு 4 ரூபாயாகவும், வெளியூருக்கு 4½-ரூபாயாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

## ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

| | ரு. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ... | 5 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ... | 0 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ... | 1 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ... | 1 | 6 |
| குருதேவர் வாக்கியம் ... ... | 0 | 5 |
| நமது தாய்நாடு ... ... | 0 | 8 |
| பக்தியோகம் ... ... | 0 | 10 |
| கர்மயோகம் ... ... | 0 | 12 |
| சிகாகோ பிரசங்கம் ... ... | 0 | 5 |
| விவேகானந்தரின் கடிதங்கள் ... | 0 | 8 |
| எனது போர் முறை ... ... | 0 | 2 |
| பவாஹாரி பாபா ... ... | 0 | 3 |
| ஜகஜீவபர விளக்க வினாவிடை ... | 0 | 13 |
| பக்தி மார்க்கம் ... ... | 0 | 2 |
| முத்திநெறி ... ... | 0 | 5 |
| எல்லாவற்றிலும் இறைவனைக் காணல் | 0 | 2 |

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

---

## கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.


Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.